# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 24 - 05.05.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்



## போர்க்கலை வல்லுநர்களின் கணிப்பீடுகளுக்கு அப்பாற்பட்டவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன்

வன்னிக்காட்டில் அவருடன் இருந்த நாட்கள் மறக்க முடியாதவை

ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி பேட்டி

## மட்டக்களப்பில் தற்கொலைதாரிகளின் பயிற்சி முகாம் கண்டுபிடிப்பு





## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடு இலங்கை அரசுக்கு மட்டுமல்ல கூட்டமைப்பிற்கும் சவாலாகவே இருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பேட்டி

## அப்பாவி மாணவர்களை பயங்கரவாதிகளாக சித்தரித்து கைது செய்தமை கண்டிக்கத்தக்கது

கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பீட மாணவர் ஒன்றியம்

## ‘ஏப்ரல் 21’ ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள்

பூமிகன்



# மட்டக்களப்பில் தற்கொலைதாரிகளின் பயிற்சி முகாம் கண்டுபிடிப்பு





மட்டக்களப்பு தாழங்குடா ஒல்லிக்குளம் முஸ்லிம் கிராமத்தில் அமைந்திருந்த தீவிரவாதிகளின் பயிற்சி முகாம் ஒன்று இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு தாழங்குடா ஒல்லிக்குளம் பகுதியில் இன்று காலை சிறீலங்கா அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலில் இந்த தீவிரவாத அமைப்பினரின் பயிற்சி முகாம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

ஐ.எஸ். அமைப்பின் தற்கொலை தாரியான ரில்வானின் தலைமையில் இயங்கியதாக கூறப்படும் குறித்த பயிற்சி முகாமில் வைத்தே தீவிரவாதிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. குறித்த பயிற்சி முகாமில் இருந்து தற்கொலை தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் எஸ்லோன் குழாய் கைப்பற்றப்பட்டுள்ளது.

குழாயில் தயாரிக்கப்பட்ட வெடிபொருள் அண்மையில் கட்டுநாயக்க விமான நிலைய வீதியில் கண்டெடுக்கப்பட்டிருந்தது. எனவே அந்த வெடிகுண்டு இங்கு தயாரிக்கப்பட்டதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த பயிற்சி முகாமில் இருந்த அப்துல் ரகுப் என்பவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குறித்த பயிற்சி முகாமில் வைத்தே பல வெடிபொருட்கள் சோதனை செய்யப்பட்டுள்ளதுடன் இந்த பயிற்சி முகாமில் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வெடி குண்டே கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி பாலமுனையில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# இந்த தேசம் அல்லாஹ்வின் தேசம் மாணவர்களை கொல்லுவோம்

## கல்லூரி அதிபருக்கு எச்சரிக்கை கடிதம்




யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு எச்சரிக்கை கடிதம் ஒன்று விடுக்கப்பட்டுள்ளதாக அதிபரினால் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பு யாழ்ப்பாணம் என்னும் அடையாளத்தை கொண்டு, சுண்டுக்குளி கல்லூரி அதிபருக்கு இந்த எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் இந்த தேசம் அல்லாஹ்வின் தேசம், இங்கு இஸ்லாமிய மக்கள் மட்டுமே வாழ முடியும். சிலுவை தூக்கிகளோ வேறு யாருமோ வாழ முடியாது, சிலுவை தூக்கி மாணவர்களை கொல்லுவோம் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் தொடர்பில் காவல்துறையினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# பல்கலைகழக மாணவர்களின் கைது பேரினவாத பழி தீர்ப்பின் அடையாளம்

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கடும் கண்டனம்

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ். பபில்ராஜ் ஆகியோர் சிங்கள படையினரால் கைது செய்யப்பட்டுள்ளமையானது தமிழர் தாயகத்தில் கோலோச்சி நிற்கும் சிங்கள பேரினவாதத்தின் பழிதீர்ப்புக்கான அடையாளமாகும். இதனை வன்மையாக கண்டிப்பதோடு உடனடியாக அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் வலியுறுத்தியுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ்.பபில்ராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தாக்குதல்கள் கொழும்பு, மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளிலே தமிழ் மக்களை இலக்கு வைத்துத் தான் நிகழ்ந்தன. தீவிரவாதத்தினை வேரோடு பிடுங்குவதற்காக அவசரகாலச் சட்டம் உடனடியாக அமுலாக்கப்பட்டு, சிறீலங்கா படைகளின் கையில் அதிகாரங்கள் வழங்கப்பட்டன என்பது அனைவரும் அறிந்த விடயம்.

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழர்களே எமது எதிரிகள். தமிழ் இளைஞர்களே ஆபத்தானவர்கள். கிடைக்கும் சந்தர்ப்பங்களில் நாம் தமிழனத்தினை அழிக்க வேண்டும். இப்படியான சிந்தனைகள் ஆழமாக ஊட்டப்பட்டு வளர்க்கப்பட்டவர்கள்தான் சிறீலங்காவின் படையில் உள்ளார்கள்.

2009ஆம் ஆண்டு பச்சிளம் பாலகன் பாலச்சந்திரன் போன்று ஆயிரம் ஆயிரம் பாலச்சந்திரன்களை அழித்து இரத்தம் தோய்ந்தவைதான் இந்த சிறீலங்கா படைகள். இப்படிப்பட்ட சித்தாந்தத்துக்குள் கட்டமைக்கப்பட்ட

தொடர்ச்சி 6 ஆம் பக்கம் ➔

# அப்பாவி மாணவர்களை பயங்கரவாதிகளாக சித்தரித்து கைது செய்தமை கண்டிக்கத்தக்கது

## கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பீட மாணவர் ஒன்றியம்

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களை அடுத்து பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாக கூறி 03.05.2019 அன்று யாழ் பல்கலைக்கழகத்தினை சோதனை செய்வதற்கு இலங்கை இராணுவம் அனுமதி கோரியிருந்தது. இதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி அளித்திருந்ததுடன் மாணவர் ஒன்றியமும் தனது பூரண ஒத்துழைப்பினை வழங்கி இருந்தது. இதுவரை காலமும் பல்கலைக்கழக வளாகத்தில் இராணுவம் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இருந்தும் தற்காலத்தில் இடம்பெறும் பயங்கரவாத அச்சுறுத்தல்களிலிருந்து பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பை இராணுவம் உறுதி செய்யும் என்ற நம்பிக்கையிலேயே இச்சோதனைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கட்டிடத்தில் காணப்பட்ட தமிழீழ தேசிய தலைவரது புகைப்படம் மற்றும் முள்ளிவாய்க்கால் அவலங்களை குறிக்கும் பதாதைகள் காணப்பட்டதனை காரணம் காட்டி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், செயலாளர் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஊழியர் கைது செய்யப்பட்டு 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டிய காவல்துறை மற்றும் இராணுவத்தினரே அப்பாவி மாணவர்கள் மற்றும் ஊழியரினை கைது செய்தமை என்பது மன வேதனை அளிக்கின்றது. தற்போதைய அசாதாரண சூழ்நிலைகளுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பே காரணமாக உள்ளது. இச்சூழ்நிலையை காரணம் காட்டி அப்பாவி மாணவர்களினை பயங்கரவாதிகள் என சித்தரித்து கைது செய்தமையை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகம் வன்மையாக கண்டிப்பதுடன் அவர்களின் எதிர்கால நலன் கருதி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதனையும் இலங்கை அரசாங்கத்திடம் வேண்டி நிற்கின்றோம்.

யுத்தம் முடிவடைந்த காலத்திலிருந்து பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் இன, மத, மொழி பேதம் கடந்து ஒற்றுமையாகவே எமது கல்வி மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். நீண்ட காலத்திற்கு முன்பு வைக்கப்பட்ட புகைப்படத்தை காரணம் காட்டி அப்பாவி தமிழ் மாணவர்களை கைது செய்தமையானது மாணவர்களின் ஒற்றுமையினை சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே காணப்படுகின்றது. செய்யாத தவறுக்காக கைது செய்யப்பட்ட அப்பாவி மாணவர்கள் மற்றும் ஊழியரின் விடுதலைக்கு பேதங்கள் கடந்து அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என்பதனை வேண்டி நிற்கின்றோம்.

# தற்கொலை குண்டுத்தாக்குதலுக்கு வெடிகுண்டுகளை தயாரித்தவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்



தமிழர் தாயகம் மற்றும் கொழும்பு உட்பட பல இடங்களில் நடத்தப்பட்ட தொடர் தற்கொலை வெடிகுண்டுகளை தயாரித்த பிரதான நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். நீர்கொழும்பு கட்டுவபிட்டிய தேவாலயத்தில் வெடி குண்டை வெடிக்க வைத்து பெருமளவு மக்களை கொலை செய்த தீவிரவாதி தொடர்பில் முக்கிய பல தகவல்கள் வெளியாகியுள்ளது. வாழைச்சேனை பிரதேசத்தை மொஹமட் ஹஸ்துன் என்பவர் தேசிய தவ்ஹித் ஜமாத் அமைப்பின் பிரதான வெடிகுண்டு நிபுணர் என பாதுகாப்பு பிரிவு உறுதி செய்துள்ளது. வெடிகுண்டு தயாரிப்பு தொடர்பில் மொஹமட் ஹஸ்துன் வெளிநாட்டில் பயிற்சி பெற்றுள்ளார். அவரது மனைவி சாரா என்பவர் சாய்ந்தமருது தற்கொலை தாக்குதலில் உயிரிழந்துள்ளார். சாரா வாழைச்சேனையில் வசித்து வந்துள்ளார். தற்கொலை தாக்குதலுக்கு தேவையான நிதி தெமட்டகொட இப்ராஹிம் குடும்பத்தினால் வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஐ.எஸ். பயங்கரவாதம் ஒழித்துக்கட்டப்படும் மைத்திரி சபதம்



இந்த வருட இறுதிக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு சனாதிபதி தேர்தல் சிறப்பாக நடத்தப்படும் என்று சிறீலங்கா சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

42 வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 250 ற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்த ஏப்ரல் 21 தாக்குதல்களின் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் உள்ளதை தாங்கள் நம்புவதாகவும் சனாதிபதி சர்வதேச ஊடகமான ரோய்ட்டர்ஸ் செய்தி சேவைக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “தீவிரவாதிகளின் இந்த செயற்பாடுகளினால் தேர்தலை தள்ளிவைக்க முடியாது, எனவே தேர்தலுக்கு முன்னதாக பயங்கரவாதத்தினை ஒழித்து நாட்டில் ஸ்திரத்தன்மையினை கொண்டு வருவேன்.

ஏற்கனவே தற்கொலை குண்டுதாரிகளின் குழுவுடன் தொடர்புடைய 25 முதல் 30 வரையான நபர்களையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம், அவர்கள் தற்கொலைதாரிகளுடன் தொடர்பா என்பது தொடர்பில் தகவல்கள் கிடைக்கவில்லை. இருப்பினும் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்த தாக்குதல் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இருப்பதனால் இந்தத் தாக்குதல்களானது, இலங்கை பிரச்சினை அல்ல, இது சர்வதேச பயங்கரவாத செயற்பாடாகும்.

குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, ரஷ்யா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளால் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. இதேவேளை இந்த விடயத்தில் அமெரிக்க பெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன் மற்றும் இன்டர்போல் உட்பட 8 நாடுகளில் இருந்து புலனாய்வுப் பிரிவினர் இலங்கைக்கு உதவுகின்றனர்.” என சனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த தாக்குதலின் பின்னணியில் தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் ஜம்மியத்துல் மல்லத்து இப்ராஹிம் ஆகிய இரு சிறிய குழுக்களே தற்கொலை குண்டு தாக்குதலை நடத்தியது என காவல்துறை கூறியுள்ளனர். அத்தோடு இதற்கு முக்கிய சூத்திரதாரியாக தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹரான் ஹாசிமே உள்ளார் என்றும் பொலிஸ் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரணம் தரும் முள்ளிவாய்க்கால் தசாப்த நினைவேந்தலை முடக்கும் முயற்சியா?

தமிழன வரலாற்றில் ஆற்றுப்படுத்த முடியாத அந்த ரணமிக்க நாள் மே 18. முள்ளிவாய்க்காலின் தசாப்த நினைவேந்தலை செய்வதற்கு ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் எழுச்சி பெற்ற ஐ.எஸ்.ஐ.எஸ். உயிர்த்த ஞாயிறன்று உயிர் குடிக்கின்றது. இந்த உயிர்த்த ஞாயிறிலும் தமிழனத்தின் உறவுகளே குருதி சிந்தி மரிக்கின்றன. விடுதலை வேட்கையுடனும் நீதிக்கான ஏக்கத்துடனும் நகர்ந்து செல்லும் ஈழத்தமிழனத்தினை கட்டமைக்கப்பட்ட ரீதியில் இன அழிப்புச் செய்வதற்கு அரச பயங்கரவாதம் ஒருபுறத்திலும், அடிப்படைவாத தீவிரவாதம் மறுபுறத்திலும் வேட்டை ஆடிக்கொண்டிருக்கின்றன.

மரபியல் ரீதியான அணுகுமுறைகளும் இல்லாது, சனநாயக ரீதியான தத்துவார்த்த கோட்பாடுகளும் இல்லாது, பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியை தக்கவைப்பதற்காக “முண்டு கொடுக்கும்” நிலைக்கு தமிழ்த் தேசிய அரசியல் பலவீனம் அடைந்துவிட்டது.

அண்மைக்காலமாக வேட்கையும், ஏக்கமும் மிக்க இனத்திற்காக இப்போது யார் இருக்கின்றார்கள் என்ற பிரதான கேள்வி எழுகின்றது. எமக்காக நாமே என்று தமிழினம் வீதிக்கு இறங்குகின்றது. சனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்கின்றது.

அன்று தமிழினத்தின் விடுதலைக்கான ஊற்றாக இருந்த யாழ். பல்கலைக்கழகம் இன்றும் அதே இனத்தின் விடுதலைக்காக பற்றுறுதியுடன் ஆதரவளிக்க களமிறங்கியது.

விசேடமாக 2015ஆம் ஆண்டு தமிழ் அரசியல் தலைமைகள் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களிடத்தில் சரணாகதி அடைந்துவிட்ட பின்னர் யாழ்.பல்கலை மாணவர்களின் விடுதலைக்கான சனநாயக ரீதியிலான போராட்டங்கள் முழுவீச்சைப் பெறுகின்றன. அதுமட்டுமன்றி, 2017ஆம் ஆண்டு தன்னுயிர்களை இன்னுயிர்களாக கருதி ஆகுதியாக்கிய அத்தனை உறவுகளையும் நினைவு கூரும் புனித நாளான மே 18 அன்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அரசியல் சுயலாபம் தேட முற்படுகின்றார்கள்.

இதனால் அதற்குப் பின்னரான காலத்தில் நினைவேந்தல் நிகழ்வினை உணர்வு பூர்வமாக நகர்த்தும் பாரிய பொறுப்பினையும் பல்கலைக்கழக சமூகமே பொறுப்பேற்றிருந்தமை வெளிப்படை.

அது போன்று, சிறிலங்கா அரசு செய்த இனவழிப்புக்கான பொறுப்புக்கூறலை செய்வதற்கு ஐ.நா அரங்கில் சர்வதேசம் கால அவகாசம் வழங்க கூடாது என்ற கோரிக்கை தாயகத்தில் எழுந்தபோது யாழ்.பல்கலைக்கழக மாணவர்களே ஒருங்கிணைத்து அதனை உலகத்திற்கு உரக்கக் கூறினார்கள்.

இவ்வாறு அண்மைக் காலமாக யாழ்.பல்கலை சமூகத்தின் இனவிடுதலை ரீதியான பார்வை பரந்துபட்டதன் காரணத்தால் தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் அவர்கள் முண்டுகொடுக்கும் ஆட்சியாளர்களுக்கும் “பந்து” தங்களின் கையைவிட்டு போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. இந்த அச்சத்தினை போக்குவதற்கு நாட்டில் ஏற்பட்ட அவசரகாலச் சட்டம் மிகப்பொருத்தமான தருணமாக மாறியது. பல்கலை மாணவர்களின் எழுச்சியும், வீச்சும் மிக்க அனைத்து செயற்பாடுகளையும் முடக்கிப்போடுவதையே திட்டமாக கொண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ்.கபில்ராஜ் ஆகியோரை கைது செய்துள்ளார்கள்.

இவர்களின் கைதுக்கு படையினரும், காவல்துறையினரும் கூறும் காரணங்கள் மிகவும் வேடிக்கையானவை. தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தினை வைத்திருந்தார்கள் என்பதுதான் பிரதான காரணம்.

விடுதலைப்புலிகளை தலைதூக்காமல் அழித்துவிட்டோம். அதன் தலைமையை மரணிக்க செய்துவிட்டோம் என்று சர்வதேசம் பூராகவும் மார்பு தட்டிய படைகளுக்கு அந்த மாவீரனின் புகைப்படம் மீது எத்தனை அச்சம் இருக்கின்றது. தன்னின விரோதிகளாக மூளைச்சலவை செய்யப்பட்டுள்ள படைகள் தமிழனத்தினை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தாக்கத்தான் முற்படும். விடுதலைக்காவும், நீதிக்காவும் போராடும் இனத்தில் உள்ள ஒவ்வொருவனும் மாவீரனே என்பதை சிங்கள பேரினவாதம் அறிவதற்கு வாய்ப்பில்லை.

இனப்பற்று மிக்க இளம் சந்ததியை அடக்குவதாக நினைத்து இரு மாணவர்களை கைது செய்வதன் மூலம் முள்ளிவாய்க்கால் முற்றத்தினை வெறுமையாக்க முடியும் என்று பேரினவாதம் தப்புக்கணக்குப் போடுகின்றது. மாணவர்களின் சக்தி மாபெரும் சக்தி என்பதே வரலாறு. தனது இனவழிப்பு வேட்டையை நிகழ்த்தவதற்காக யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்துள்ளமை படையினரின் அடிப்படைச் சட்டங்களை மீறும் மிலேச்சத்தனமான செயற்பாடும் பேரினவாதத்தின் இயலாமையுமே ஆகும். மாணவர்களை கைது செய்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முடக்குவதற்கு முனையும் பேரினவாதிகளும், அவர்களின் முண்டு கொடுப்பாளர்களும் ஈழத்தமிழ் இனத்தின் விரோதிகளே...! துரோகிகளே..!

# அந்நியன் விக்கிரம் பாணியில் சுமந்திரன்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேள்வி?

தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அந்நியன் திரைப் படத்தின் விக்கிரம் போல் பாசாங்கு செய்கின்றாரா? என கேள்வி எழுப்பியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி சனநாயக போராட்டங்கள் முன்னெடுக்கப் படும் என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்து அவசரகால பிரகடனம் நடைமுறைப்படுத்தப்பட்டது. குண்டு வெடிப்பு நடைபெற்ற இடங்களை விட வடக்கு மாகாணத்திலேயே இராணுவ கெடுபிடிகள் அதிகரித்து காணப்படுகின்றன. அமைதியாக உள்ள எமது பிரதேசத்தில் போர்க்காலத்தை போல பதற்றமான நிலைமையை இராணுவம் உருவாக்க முயற்சிக்கின்றது. அதன் ஓர் அங்கமே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலை நடத்துனர் கைது ஆகிய சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு



போரின் போது காணாமல் ஆக்கப்பட்டவர் களுக்காகவும் தமிழ் இன அழிப்புக்கு உரிமை கோரியும் பல போராட்டங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் இதுவரை காலமாக முன்னெடுத்து வருகின்றது. இந்த செயலுக்கு பழி தீர்க்கவும் அவற்றை முடக்கவும் திட்டமிட்ட வகையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை இராணுவம், காவல்துறை ஆகியோரது சீருடைகளில் வித்தியாசங்கள் இருந்தாலும் அவர்களின் மனநிலை தமிழர்களை அதிலும் குறிப்பாக தமிழ் இளைஞர்களை அடக்கி ஒடுக்க வேண்டும். என்ற வஞ்சக மன நிலையிலேயே உள்ளனர்.

அரசுக்கு நாடாளுமன்றத்தில் எல்லா வகையிலும் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே இதற்கு முழுப் பொறுப்பையும் கூறவேண்டும். ஏனெனில் பயங்கரவாத தடைச் சட்டத்தினை அமுல்படுத்த நாடாளுமன்றத்தில் எவ்வித யோசனையும் இன்றி ஆதரவு கொடுத்தனர். இப்போது மாணவர்கள் கைது செய்யப்பட்டதும் காவல் நிலையத்துக்கு ஓடி வருகின்றனர். தென்னிலங்கையில் ஒரு முகத்தையும் வடக்கில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு முகத்தையும் அந்நியன் திரைப்பட விக்கிரம் போல காட்டி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நாடகமாடி வருகின்றார்.

உள்நாட்டு போரின் போது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நாளான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு நடைபெறவுள்ள நிலையில் இந்த சம்பவங்கள் திட்டமிடட முறையில் நடைபெற்றுள்ளன. எனவே பல்கலைக்கழக மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இல்லாதுவிடின் வடக்கில் சனநாயக போராட்டங்கள் நடைபெறும் என்றார்.

# சிறீலங்கா அரசின் இன ஒடுக்கு முறைக்கான அண்மைய சாட்சியம் அஜந்தன்

## தமிழ் புத்திஜீவிகள் அறிக்கை

தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசு எவ்வாறு பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றது மற்றும் எவ்வாறு பொய்யாக தண்டிக்கின்றது என்பதற்கான அண்மைய சாட்சியமாக வவுணதீவில் இடம்பெற்ற சிறீலங்கா காவல்துறையினர் மீதான தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளி அஜந்தன் உள்ளார். என்று தமிழ் புத்திஜீவிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கையில்

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் சிறீலங்காவின் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலையின் தொடர்ச்சியாக நவம்பர் மாதம் வவுணதீவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் வழமைபோல எந்தவிதமான ஆதாரங்களையும் சேகரிக்காத சிறீலங்கா அரசும் அதன் காவல்துறையும் முன்னாள் போராளிகளை நோக்கி கையை காண்பித்திருந்தது.

முன்னாள் போராளி அஜந்தன் கைது செய்யப்பட்டு ஆதாரங்கள் உறுதிப்படுத்தப்படாத நிலையில் தடுத்து வைக்கபட்டுள்ளார். சிறீலங்காவின் தடுப்புக்காவலில் உள்ள அரசியல் கைதிகளைப் போலவே அவரும் விசாரணைகள் இன்றி மற்றும் குற்றங்கள் உறுதிப்படுத்தாத போதும் தடுத்து வைக்க பட்டிருந்தார்.

விசாரணைகள் இன்றி தடுத்து வைப்பதற்கு சிறீலங்கா அரசிடம் உள்ள ஓரே ஆதாரம் தமிழர் என்ற சிறுபான்மை இனம் மற்றும் முன்னாள் போராளி என்ற பெயர். ஆனால் தற்போது வவுணதீவு தாக்குதலை மேற்கொண்டது சிறீலங்கா அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லீம் அரசியல்வாதிகளின் துணையுடன் இயங்கி வரும் தேசிய தௌஹீத் ஜமாஅத் என்ற அமைப்பு என்பது உறுதியாகியுள்ளது.

சிறீலங்கா படையினரால் பயிற்சிகள் வழங்கப்பட்ட இந்த அமைப்பே கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களை நிகழ்த்தியிருந்ததுடன், அந்த தாக்குதல்களில் 250 இற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். தமிழ் கிறிஸ்தவ மக்களை நோக்கி இலக்குவைப்பட்ட இந்த தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் மக்களாவார்கள். வவுணதீவுத் தாக்குதலில் கைது செய்யப்பட்டவர்களே தற்போது உறுதிப்படுத்தியுள்ள நிலையில் தமிழ் மக்கள் மீதான சிறீலங்கா அரசின் பொய் வழக்குகள் மற்றும் பொய்யான குற்றச்சாட்டுக்கள் அம்பலமாகி உள்ளது. அதாவது தமிழ் மக்களை நீதிக்குப்புறம்பாக சிறீலங்கா அரசு தண்டித்து வருவது இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நீதிக்குப்புறம்பான கைதுகள், கடத்தல்கள், படுகொலைகள் மற்றும் காணாமல் போகச் செய்தல் என்பவற்றை சிறீலங்கா அரசு அப்பாவித் தமிழ் மக்கள் மீது எவ்வாறு நிகழ்த்துகின்றது என்பதை அனைத்துலக சமூகமும், மனித உரிமை அமைப்புக்களும் இதன்மூலம் அறிந்துகொள்ள வேண்டும். அது மட்டுமல்லாது இந்த சம்பவத்தை தமிழ் அமைப்புக்கள் அனைத்துலக சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுசெல்வதுடன்,




சிறீலங்காவில் உள்ள சட்டங்களை சிறீலங்கா அரச படையினர் எவ்வாறு தமிழ் மக்கள் மீது தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்பதையும் நாம் வெளிஉலகின் முன் கொண்டுவர வேண்டும்.

விசாரணைகள் எதுவுமின்றி சிறீலங்கா அரசின் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளும், இவ்வாறான பழிவாங்கல் மற்றும் நீதிக்குப் புறம்பாக சாட்சியங்கள் எதுவுமின்றி கைது செய்யப்பட்டவர்களே. எனவே அவர்களையும் சிறீலங்கா அரசு உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கைகளை நாம் முன்வைக்க வேண்டும். ஒரு சிறுபான்மை இனமக்களை சாட்சியங்கள் எதுவுமின்றி எழுந்தமானமாக கைது செய்வதும் விசாரணைகள் இன்றி குற்றங்களை உறுதிப்படுத்தாது தடுத்து வைப்பதும் இன ஒடுக்கு முறையின் வடிவங்களே. அவசரகாலச்சட்டத்தை பயன்படுத்தி கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் துன்புறுத்தப்பட்டவர்கள் தொடர்பில் சிறீலங்கா அரசு மீது சுயாதீன விசாரணைகளுக்கான கோரிக்கையை நாம் முன்வைப்பதுடன், அதற்கான ஆதரவுகளையும் அனைத்துலக மட்டத்தில் திரட்டவேண்டும்.

# போர்க்கலை வல்லுநர்களின் கணிப்பீடுகளுக்கு அப்பாற்பட்டவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன்

## வன்னிக்காட்டில் அவருடன் இருந்த நாட்கள் மறக்க முடியாதவை

### ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி

முள்ளிவாய்க்காலுக்கு முன் எமது மண்ணின் விடுதலைப் போராட்டத்திற்கு ஈக வரலாறு இருப்பது போல் அதற்கு தோள் கொடுத்து நின்ற தாய்த் தமிழகத்திற்கும் ஓர் ஈக வரலாறு உண்டு. கடலினும் பெரிதான ஈக நெஞ்சங்களின் ஒரு துளி சாட்சி தான் திராவிடர் விடுதலைக்கழகத்தின் தலைவரும் ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான கொளத்தூர் தா.செ.மணி. 1984 சனவரி 05 முதல் 1986 நவம்பர் இறுதிவரையான மூன்று ஆண்டுகளுக்கு புலிகள் பயிற்சி எடுப்பதற்காக தன்னுடைய 15 ஏக்கர் நிலத்தைக் கொடுத்தார். இன்றும் பொன்னம்மானுக்கு ஓர் வீரவணக்க நினைவுச் சின்னமும் பயிற்சி எடுக்கும் போது உயிரிழந்த மாவீரர் ரோய் உறங்கும் கல்லறையும் கொளத்தூரில் இருக்கிறது. இக்காலத்தில் சில அரசியல் காரணங்களுக்காக ஒரு முறை வெளித் தொடர்புகள் ஏதுமின்றி தேசிய தலைவர் இவருடன் 23 நாட்கள் தங்கி இருந்துள்ளார். 1989 ஆம் ஆண்டில் முதல் மாவீரர் நாள் நிகழ்வுக்கு தேசிய தலைவரால் அழைக்கப்பட்டு தாயகத்திற்கு வந்து இரண்டு வாரங்கள் வன்னிக் காட்டில் தங்கி இருந்தவர். 1991 பிப்ரவரியில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1994 மே மாதத்தில் புலிகளுக்கு ஆயுதம் கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு தடாவில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது பறிமுதல் செய்யப்பட்ட இவரது மகிழுந்து இன்றுவரை திருப்பிக் கொடுக்கப்படவில்லை. 1995 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வேலூர் சிறப்பு முகாமில் இருந்து புலிகள் சுரங்கம் தோண்டி தப்பிய வழக்கில் மீண்டும் ஓர் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். 2009 தொடக்கத்தில் ஒரு முறையும் 2013 இல் ஒருமுறையும் ஈழ விடுதலையை ஆதரித்தமைக்காக தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தமிழகத்திற்காக அன்றி தமிழீழத்திற்காக இவர் சிறையில் கழித்த நாட்களே அதிகம். ஓரிரு மாதங்கள் அல்ல, ஆண்டுகள் பல சிறையில் கழித்தவர். அறிவுத் தளம், வெகுஜனப் போராட்ட தளம், நம்பிக்கை தளம் என மூன்றிலும் பயணித்தவர். இவர் இதயம் திறந்து பேசினால் அது உலகம் அறியாத உண்மைகளாக மட்டும் இருக்காது, விடுதலைக்கான பாதையில் கடந்து வந்த காட்டாறுகள்



எத்தனை எத்தனை என்பதாகவும் இருப்பதால் இவர் செய்தவற்றை இவரோ அல்லது பிறரோ பேசுவதில்லை. எமது விடுதலைக்காக தமிழகத்தில் நெருப்பை விழுங்கியவர்களில் இவரும் ஒருவர். தன்னை எங்கும் முன்னிலைப்படுத்தாது இவர் ஆற்றிய பங்களிப்பை ஈழ விடுதலைப் போராட்டத்தைக் கூர்ந்து கவனித்துவரும் அனைவரும் அறிவார்கள். தேசிய தலைவரால் உரிமையோடு 'அண்ணா' என்று அழைக்கப்படும் இவர் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டி.



1989இல் கொளத்தூர் தா.செ.மணி வன்னியில் வந்து தேசிய தலைவர் பிரபாகரனுடன் தங்கியிருந்த போது.

**கேள்வி: இலங்கையிலும் தமிழர் தாயகத்திலும் தற்போது இடம்பெற்ற தாக்குதல் குறித்து இலங்கை அரசுக்கு முன்னரே தகவல் கிடைத்திருந்தும் அதை தடுப்பதில் இலங்கை அரசு அக்கறை கொள்ள தவறியதை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

இந்தியாவிலிருந்து இலங்கை அரசுக்கு, அல்லது இந்திய உளவுத்துறை இலங்கை உளவுத்துறைக்கு கிறிஸ்தவர் மீதான ஒரு தாக்குதல் நடக்க இருக்கிறது என்ற செய்தியை அனுப்பியதாக பல்வேறு செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் தாக்குதல் நடந்த அன்று இலங்கை அதிபர் எவ்வகை அத்தியாவசியமான, நெருக்கடியான தேவைகள் அற்ற நிலையிலும் வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டு இருந்திருக்கிறார். தென்னிலங்கையிலும்,கிழக்கு மாகாணத்திலும் தான் தற்கொலைத் தாக்குதல் நடந்தது எனினும் தமிழ்க் கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளில், தமிழ் மக்களின் பூசைவேளையில்த்தான் நடந்துள்ளன என்பது, ஏற்கனவே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்படுத்தி வைக்கப்பட்டுள்ள பகைமையை போல ஒரு பகைமை கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் நடக்கவேண்டும் என்று எண்ணி இருக்கலாம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் குலைக்கும் நோக்கில் இஸ்லாமியர்களிடையே ஆயுதக் குழுக்களை உருவாக்கியதே இலங்கை அரசுதான். அவை தமிழர்களுக்கு எதிராகவே உருவாக்கப்பட்டிருந்தன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தோளோடு தோள் நின்ற தமிழர்களுக்கும் தமிழ் முஸ்லிம்களுக்கும் பகையை உருவாக்கி மோதவிட்டது இலங்கை அரசு. 2009 முள்ளிவாய்க்காலுக்குப் பின் முஸ்லிம்களிடையே தான் உருவாக்கி வைத்திருந்த ஆயுதக்குழுக்களை திடீரெனக் கலைத்தது இலங்கை உளவுத் துறை. அப்படி கலைக்கப்பட்ட குழுக்களில் இருந்து உருவானதுதான் தேசிய தவ்ஹீத் ஜமாத் போன்ற அமைப்புகள். இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்களில் பலர் இலங்கை உளவுத்துறையிடம் பண உதவி, ஆயுத உதவி பெற்றவர்கள் என்று செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

மேலும் கிறிஸ்தவர்களின் எந்த ஒரு பிரிவும் எப்போதும் சுதந்திரக் கட்சிக்கு வாக்களிப்பது இல்லை. அவர்கள் ஐக்கிய தேசிய கட்சிக்குத்தான் வாக்களிப்பார்கள் என்பதால் ஏற்பட்ட உதாசீன உணர்வும் ஒருவேளை காரணமாக இருந்திருக்கலாம். 1980களில் தமிழ் வணிகர்களிடம் இருந்துவந்த கொழும்பு வணிகம், இஸ்லாமியர் கைகளுக்கு மாறியதைப் போல ஈஸ்டர்நாள் தாக்குதல் காரணமாக சிங்கள வணிகர்கள் கைகளுக்கு மாறும் வாய்ப்பு தனது அரசியல் நலனுக்குப் பயன்படலாம் என்ற எதிர்பார்ப்பும் இருந்திருக்கலாம்.

முதலில் மலையகத் தமிழர்கள், பின்னர் ஈழத் தமிழர்கள் அதை தொடர்ந்து தமிழ் முஸ்லிம்கள் இப்போது தமிழ் கிறிஸ்தவர்கள் என இலங்கையில் உள்ள சிறுபான்மை மக்கள் சிறுக சிறுக அழிந்து போகட்டும் என இலங்கை அரசு விரும்புகிறது.

**கேள்வி: சிறீலங்காவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்புக்களில் பெருமளவான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகள் தொடர்பாக சிறீலங்கா அரச தலைவர்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் தொடர்பில் நீங்கள் என்ன கருத்தை கூற விரும்புகின்றீர்கள்?**

நிச்சயமாக விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் என்று சித்தரித்து வந்தவர்கள் இப்போது நடந்த இந்த தற்கொலைத் தாக்குதலில் பயங்கரவாதத்திற்கும், விடுதலைப் போராட்டத்திற்குமான வேறுபாட்டை உணர்ந்திருப்பார்கள். போர் இலக்கையோ அல்லது அரசின் பொருளாதார இலக்குகளையோ தவிர வேறு எதையும் தாக்கியிராத விடுதலைப்புலிகளுக்கும், கண்ணை மூடிக் கொண்டு அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துகிற பயங்கரவாதத்திற்குமான வேறுபாட்டை உணர்ந்து இருப்பார்கள்

**கேள்வி: முன்னர் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக சித்தரிப்பதில் முனைப்புக் காண்பித்த சிறீலங்கா அரசு அதில் வெற்றியும் பெற்றிருந்தது. ஆனால் உண்மையான பயங்கரவாதம் என்பது எப்படி இருக்கும் என்பதை அண்மையில் நடந்த தற்கொலை தாக்குதல் மூலம் இலங்கை அரசு உணர்ந்திருக்கும் இது குறித்து தங்கள் கருத்து?**

தொடர்ச்சி ➔

## தொடர்ச்சி →

இப்போது இந்த கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபாட்டுக்கு வந்தவர்கள் மீதும் வெளிநாட்டிலிருந்து வந்து விடுதிகளில் தங்கி இருந்தவர்கள் மீதும் கண்ணை மூடிக்கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பின்னால் அறம் சார்ந்த விடுதலைப்புலிகளின் போர் முன்னெடுப்புகளை நினைவுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள், சிங்களத் தலைவர்கள். இது காலத்தின் தேவை கருதி பேசப்பட்ட பசப்பாக இருக்குமே தவிர, விடுதலைப்புலிகளின் - ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து விட்டார்கள் என்று நாம் கருத முடியாது என்பதே என் கருத்தாகும். மேலும் அப்பாவி தமிழ்மக்கள் பாதுகாப்பு கருதி அடைக்கலம் புகுந்திருந்த செயிண்ட் பீட்டர் தேவாலயம், மடு மாதா கோயில் மீது நிகழ்த்தப்பட்ட குண்டு மழைத் தாக்குதல்களும், போர்நிறுத்த ஒப்பந்த காலத்திலேயே புலிகளை மேற்குல நாடுகள் பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்து அறிவிக்கச் செய்தமையும் நினைவில் வரத்தான் செய்கிறது.

**கேள்வி: சிறீலங்காவில் தற்போது இடம்பெற்ற இந்த தற்கொலை தாக்குதல் ஈழத் தமிழர்களின் நீதிக்கான பயணத்தில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்று கருதுகீறீர்கள்?**

இப்போது நடந்திருக்கின்ற இந்த தற்கொலைத் தாக்குதல் ஈழத்தமிழர்களின் நீதிக்கான பயணத்தில் பெரும் எதிர்மறைத் தாக்கங்களை உருவாக்கும் என்பதுதான் உண்மை நிலையாகும். இந்த காரணத்தைக் கொண்டு ஏற்கனவே தமிழர் பகுதியில், வடக்கு மாகாணத்தில் பெரும் அளவில் நிறுத்தப்பட்டிருக்கிற படைப்பிரிவினரை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டு வரும் நிலையில், படையினரை தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக என்ற காரணம் கூறி தொடர்ந்தும் அங்கு நிறுத்தப்படுவார்கள். சோதனை என்ற பெயரால் தமிழ் மக்களின் நடமாட்டங்கள் மோசமாகக் கட்டுப்படுத்தப்படும். தமிழ் இளைஞர்கள் தேவையற்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப் படுவர். பன்நாட்டளவில் இலங்கை மீது மனித உரிமை ஆணையத்தில் முன்வைக்கப்பட்டு இருக்கிற விசாரணை என்பதோ, தமிழ் மக்களின் நீதிக்கான அரசியல் தீர்வு காணும் முன்னெடுப்பில் நிச்சயம் பெரும் பின்னடைவை ஏற்படுத்தத்தான் செய்யும். பயங்கரவாத தடைச் சட்டம் என்ற பெயரால் கட்டுப்பாடுகள் மேலும் இறுக்கமாகும்.

**கேள்வி: விடுதலைப்புலிகளின் தலைவர் மேதகு பிரபாகரனுடன் நெருக்கமான உறவைக் கொண்டவர் என்பதையும் கடந்து அவரின் நம்பிக்கையை பெற்றவர்களில் நீங்களும் ஒருவர் என்ற முறையில் அவரிடம் நீங்கள் கண்ட தலைமைத்துவ பண்புகள் தொடர்பில் உங்கள் பார்வை?**

எந்த ஒருவரையும் அடிக்கடி சந்திக்கையில் அவர்கள் மீதான குறைகளை அறியும் வாய்ப்பைத்தான் அவை வழங்கும். ஆனால் எனக்கோ ஒவ்வொரு சந்திப்பும் அவர்மீதான மதிப்பை, மரியாதையை வளர்க்கவே செய்தது. மேலும், அவரின் அறம் பிறழா போர்முறை - நவீன அறிவாற்றல்களை, அரசியல்ரீதியாக மட்டுமின்றி போரியல், உளவறிதல், தொலைத் தொடர்பியல், நாட்டின் மீள்கட்டமைப்பு போன்ற அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்திய பாங்கு தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும், தமிழ்நாட்டிலும் வாழும் தமிழ் மக்களை முழுமையாகப் புரிந்து கொண்டு, அவரவருக்குச் சாத்தியமான வகைகளில் விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்பைப் பெற்றமை. போராளிக் குடும்பங்கள், போரில் பாதிக்கப்பட்டோர், குடும்பம் பிரிந்த, இழந்த குழந்தைகள் மீதான அக்கறை ஆகியவற்றையும் கூறலாம்.

போரின் படையியல், அரசியல் நகர்வுகளை ஒருங்கிணைத்துக் கொண்டும், முன்னகர்த்திகொண்டும் இருந்த சூழலிலும், அனைத்துத் துறைகளிலும் அவர் வளர்த்துக் கொண்டிருந்த அறிவு என்னை வியக்கச் செய்த ஒன்றாகும். தான் குறைந்த கல்விதான் பெறமுடிந்தது என்பார், ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள முடியவில்லை என்பார். ஒருமுறை போரியல் தொடர்பான கார்ட்டூன் குறும்படங்களை அவருடன் பார்க்க வேளை வாய்த்தது. படத்தின் பாத்திரங்களின் உரையாடல்கள் ஆங்கிலத்தில் கீச்சுக் குரலில்தான் இருக்கும் என்பதை நாம் அறிவோம். எனக்குப் பல உரையாடல்கள் புரியவே இல்லை. ஆனால் தலைவர் பிரபாகரன் அவர்களோ, பாத்திரங்களின் உரையாடல்களை எனக்குத் தமிழில் விளக்கிக்கொண்டே இருந்தார். அந்த அளவு அவர் ஆங்கிலப் புலமையை வளர்த்துக் கொண்டுள்ளார்.

**கேள்வி: முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்று 10 ஆண்டுகள் அண்மித்துள்ள நிலையில் தமிழ் மக்கள் தமக்கு கிடைக்க வேண்டிய நீதிக்காகவும், தமது இருப்புக்காகவும் தற்போதும் போராடி வருகின்றனர். ஆனால் சிறீலங்கா அரசு மேற்கொண்ட இனப்படு கொலைகள் தொடர்பில் அனைத்துலக சமூகம் தொடர்ந்து பாராமுகமாக நடந்துகொள்வதற்கு பிரதான காரணம் என்ன?**

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்று 10 ஆண்டுகள் ஆன நிலையிலும் இப்போதுவரை மனித உரிமை ஆணையத்தில் ஒரு விவாதப்பொருளாக இருக்கிறதே தவிர அது குறித்து குறிப்பான நடவடிக்கை எதிலும் முன்னேற்றம் இல்லை என்பதை நாம் கண்டு வருகிறோம். அதுமட்டுமில்லாமல் மீண்டும் அவர்களுக்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்பது ஒரு பெரும் பின்னடைவாகத்தான் நாம் பார்க்கிறோம். அனைத்துலக சமூகங்களுக்கு முன்னால் இலங்கை அரசு எப்போதும் அவரவர்க்குத் தகுந்தாற்போல் தன்னுடைய பச்சோந்தி முகத்தைக் காட்டி வந்திருக்கிறது. குறிப்பாக மேற்குலக நாடுகளுக்கு முன்னால் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்றும், ஆசிய நாடுகளிடம் மேற்குலகத்தின் ஆக்கிரமிப்பிற்கு அல்லது அவர்களுடைய ஆதிக்கத்திற்கு இடம் கொடுக்காத ஆசியவாதத்தை முன்வைத்தும், சோசலிச நாடுகளுக்கு முன்னால் ஒரு முற்போக்கு சோசலிசவாதியாக ராஜபக்சவின் காலத்தில் காட்டப்பட்டது போல தொடர்ந்து காட்டிக் கொள்ளும் முயற்சிகளும் இருக்கும். எல்லாவற்றையும் விட புவியியல் ரீதியாக இலங்கைக்குள்ள முக்கியத்துவத்தை அவ்வப்போது நினைவூட்டும் வகையில் பன்னாட்டு சமூகத்திடம் தன்னுடைய முக்கியத்துவத்தை நினைவூட்டிய வண்ணமே அது இருந்து வரும் என்ற அடிப்படையில் இலங்கை அரசு தமிழர்களுக்கான நீதியை அளிப்பதில் காலம் தள்ளுவதை வெற்றிகரமாக நிகழ்த்திக் கொண்டே இருக்கும் நிலையில், எண்ணெய் வளத்தைக் கணக்கில்கொண்டு இஸ்லாமிய நாடுகள் மீது தாக்குதல்களை, இஸ்லாமியர்கள் மீது உருவாக்கி வைத்திருக்கிற வெறுப்புணர்வை, இஸ்லாமியர்கள் என்றாலே பயங்கரவாதிகள் என்ற உளவியலை மேலும் உறுதிப்படுத்துவதற்கு இந்த வெடிகுண்டுத் தாக்குதலைக் காட்டி நிற்கும். அனைத்துலக அரசுகள் எவையும் அறத்தின் பக்கம் நிற்பதில்லை, தங்களின் நலன் சார்ந்துதான் நிற்கின்றன என்ற சூழலில், இப்படிப்பட்ட எந்த ஒன்றையும் காட்டிக்கொள்ள முடியாத தமிழ் மக்களின் பக்கம் யார்தான் அக்கறை கொள்வார்கள்? நமக்கு முன்நிற்பது பெரும் பணியாகும்.

**கேள்வி: தமிழ் தேசிய கூட்டமைப்பு பன்நாட்டு விசாரணையிலிருந்து இலங்கை அரசை பாதுகாத்து வருகிறது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை கூட்டமைப்புக்கு எதிராக முன்வைத்து வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஓய்வு பெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் கட்சி ஆரம்பித்துள்ளார். இதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசுக்கு சார்பான நடவடிக்கைகளும், இனப்படுகொலை, சர்வதேச விசாரணை போன்ற மாகாணசபையின் தீர்மானங்களும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஓய்வு பெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன் மீது தமிழ் மக்களுக்கு ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. எதைத் தின்றால் பித்தம் தீரும் என்ற நிலையில் உள்ள தமிழ்மக்களுக்கு, எதிர்காலத்தில் அவரின் அரசியல் முன்னெடுப்புகளும், கூட்டணி அணி சேர்க்கையும் அவர் மீதான நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் என்று நம்புகிறேன்.

---

2 ஆம் பக்க தொடர்ச்சி ↑

### பல்கலைகழக மாணவர்களின்

*சிறீலங்கா சிங்களப்படைகளின் கையில்த் தான் தற்போது அதிகாரம் இருக்கின்றது.*

*அதனைப்பயன்படுத்தி பழைய குருடி கதவை திறவடி கதையாக, தமிழனத்தின் எதிர்கால சந்ததியினரை இலக்கு வைத்து தனது வேட்டையை ஆரம்பித்துள்ளது. அதற்கான அங்குரார்ப்பண நடவடிக்கை தான் யாழ்.பல்கலையில் அரங்கேறியுள்ளது.*

*யாழ்.பல்கலை மாணவர்களுக்கு கல்விக்கு அப்பால் சமூகம் சார்ந்த சிந்தனையும், பொறுப்பும், கடமைகளும் இருக்கின்றது. அவர்கள் பல்கலைக்கழக கல்வியை தொடரும் ஏக காலத்தில் இவை பற்றியும் சிந்திக்காது விடுவதில்லை. செயற்பாடுகளை முன்னெடுக்காது பின்னிற்பதும் இல்லை.*

*அத்தகையவர்களை அடக்கி ஒடுக்கி வைக்க வேண்டிய தேவை ஆட்சியாளர்களுக்கு இருக்கின்றது. ஆட்சியாளர்களின் தேவைகளை நிறைவேற்றவே சிங்களப்படைகள் தாயகத்தில் தனது வேட்டையை ஆரம்பித்துள்ளன.*

*தன் இனத்தின் மீதான பற்றுறுதியினைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாக அடக்குவதை விடவும் அதற்கு தலைமை தாங்குபவனையும், துடிதுடிப்பாக செயற்படுபவனையும் முளையிலேயே கிள்ளினால் எல்லாம் சரியாகி விடும் என்பது தான் பேரினவாதிகளின் கணக்காக இருக்கின்றது.*

*இதனை மையயம் வன்மையாக கண்டிக்கின்றது. கைது செய்யப்பட்ட மாணவன் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலிந்து கோருகின்றது. இத்தகைய முதுகில் குத்தும் செயற்பாடுகள் தொடர்ந்தால் பாரிய எதிர்வினைகளுக்கு பேரினவாதிகள் முகங்கொடுக்க வேண்டும் என்றும் எச்சரிக்கின்றது.*

*அதேநேரம், இனப்பற்றுடன் சனநாயக வழியில் நகரும் பல்கலை சமூகத்தினை முடக்க முற்படும் பேரினவாதிகளுக்கு முண்டு கொடுப்பவர்களும், அரசியல் இலாபம் தேட முயல்பவர்களும் முதலில் மனிதத்திற்கு மதிப்பளிப்பு எமது எதிர்காலத்தின் இரு நட்சத்திரங்களின் விடுதலையையே இலக்காக கொண்டு செயற்பட வேண்டும். பேரினவாதத்தின் இரும்புத்திரை செயற்பாடுகள் தொடருமானால் அடுத்த கட்டம் குறித்து சனநாயகத்தின் வழி வன்மமாகச் சிந்திக்க வேண்டியதை தவிர வேறு வழியில்லாத நிலைக்கு தள்ளபடவேண்டி ஏற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடு இலங்கை அரசுக்கு மட்டுமல்ல தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் சவாலாகவே இருந்தது.

## பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பேட்டி

**கேள்வி:- தாயகத்திலும், தலைநகரிலும் நடைபெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் பற்றியும் அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்?**

பதில்:- உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிர்களை பறிக்கும் வகையில் அப்பாவி பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்த மிலேச்சத்தனமான தாக்குதல்களை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மிக வன்மையாக கண்டிக்கின்றது.

இந்திய தேசிய புலனாய்வு பிரிவு இலங்கைக்கு ஏப்ரல் மாதத்திலேயே இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறவுள்ளதாக தகவல்களை வழங்கியுள்ள போதும் அது குறித்து எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை புலனாய்வுக் கட்டமைப்புக்கு கிடைக்கப்பெற்ற இத்தகைய தேசிய பாதுகாப்பு சம்பந்தமான மிக முக்கியமான விடயங்கள் எவ்வாறு கவனிப்பற்ற நிலைக்கு சென்றுள்ளது என்பது மிகப்பெரும் வினாவாகின்றது. அத்துடன் பாதுகாப்புத்துறைக்கு துறைசார் நிபுணத்துவம் அற்றவர்களின் நியமனங்கள் இவ்வாறு பாரதூரமான விடயங்கள் பொருட்படுத்தப்படாமைக்கு மிக முக்கியமான காரணங்களுள் ஒன்றாகின்றது.

அடுத்து பாதுகாப்பு கட்டமைப்பினை வழிநடத்துவதற்கான முழு அதிகாரங்களும் அரசாங்கத்திற்கு காணப்படுகின்றது. அரசாங்கம் உரிய அறிவித்தல்களை செய்திருந்தால் பாதுகாப்புத்துறை அதனைப் பின்பற்றியிருக்கும். இங்கு அறிவுறுத்தல்களை வழங்கும் பொறுப்பிலிருக்கும் அரசாங்கத்திற்குள் காணப்படும் அரசியல் முரண்பாடுகள் காரணமாக உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மையாகின்றது. இந்த அரசியல் முரண்பாடுகளுக்குள் பாதுகாப்புத்துறையும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் அதனிடமிருந்து கரிசனை மிக்க வினைத்திறனான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியாது.

இதனை விடவும், ஏழு தசாப்தங்களுக்கு மேலாக தமது உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் தமிழனத்தினை எப்படி அடக்கி ஒடுக்கலாம் என்ற சிந்தனையில்




த்தான் தற்போதைய ஆட்சியாளர்களும் பயணித்துக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு தமது தரப்பில் எத்தகைய ஆதரவுகளை வழங்கலாம் என்று தான் பாதுகாப்புத்தரப்பும் சிந்திக்கின்றது. தமிழினத்தினையே சந்தேக கண்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் என்றுமே தமக்கு தமிழினமே எதிரி என்ற பொதுப்படையில் பாதுகாப்புத்தரப்பு தனது கழுகுப்பார்வையை செலுத்தியதே தவிர தீவிரவாதம் பற்றி எந்தவொரு எண்ணப்பாட்டினையும் கொண்டிருக்கவில்லை. இத்தகைய விடயங்கள்தான் இந்தக் கொடூரம் நிகழ்வதற்கு அடிப்படையாகின்றது.

இவ்வாறான நிலையில் சனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தரப்பினரே



பொறுப்புக்கூறலைச் செய்யவேண்டும். அதனைவிடுத்து மாறிமாறி விரல் சுட்டுவதில் எவ்விதமான பயனுமில்லை. மேலும் இந்தக் குண்டுத்தாக்குதலில் அதிமாக உயிரிழந்தவர்கள் தமிழ் மக்களாகவே உள்ளனர். ஆகவே குண்டுத்தாக்குதலுக்கான பொறுப்புக் கூறலில் ஆட்சியாளர்களை ஆட்சிப்பீடத்தில் அமர்த்துவதற்கு முண்டுகொடுத்த தமிழ்த்தலைமைகளுக்கும் பதிலளிப்பதற்கான பங்குள்ளது.

**கேள்வி:- தற்கொலை குண்டுத்தாக்குதல்களை அடுத்து ஏற்பட்டுள்ள நிலைமைகளில் தாயகத்தின் அன்றாடச் சூழல் எவ்வாறுள்ளது?**

பதில்:- யுத்தம் நிறைவுக்கு வந்தாலும் வடக்கில் மட்டும் ஐந்து இலட்சம் படையினர் நிறுத்தப்பட்டிருந்தார்கள் என்பது தாங்கள் அறிந்த விடயமொன்றாகும். இந்த படையினர் தமிழர்களின் வாழ்வாதாரங்களை கைப்பற்றி, நிலங்களை பறித்து, தமது நிலைகளை பலமாக வைத்துக்கொண்டிருந்தார்கள். எந்த நேரமும் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில்த்தான் செயற்பட்டுக்கொண்டிருந் தவர்கள். புலனாய்வாளர்களாக இருந்தாலும் சரி, காவல் துறையினராக இருந்தாலும் சரி தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக கருதி கழுகுப்பார்வையுடன் தான் இருந்தார்கள்.

இவ்வாறான நிலையில் தற்போது தற்கொலைக்குண்டு தாக்குதல்கள் இடம் பெற்றவுடன் நாட்டின் தேசிய பாதுகாப்பினை மையமாகக் கொண்டு அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அரச பயங்கரவாதத்தினை பயன்படுத்தி தமிழ் மக்களை அடக்குமுறைக்குள் வைத்திருந்த ஆட்சியாளர்கள் அதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் அமைந்துள்ள இந்த அவசரகால நிலைமையை மையமாக வைத்து, கோலோச்சியுள்ளனர். குறிப்பாக, தாயகமெங்கும் விசேடமாக தமிழர்களின் பூர்விக பகுதிகளிலும் தேடுதல்கள், விசாரணைகள் என்பனவற்றை முன்னெடுக்கின்றார்கள். சோதனைச் சாவடிகள் மீண்டும் உயிர்பெற்றுள்ளன. புலனாய்வாளர்களின் தாராள நடமாட்டம் ஓங்கியுள்ளது.

இவ்வாறு தமிழர் தாயகம் எங்கும் எந்தக்குற்றமும் இழைக்காத தமிழ்ச் சமுகமும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் அவலமான நிலைமை எழுந்துள்ளது. இதனைவிடவும் தமது உறவுகளுக்காகவும், நில உரிமைகளுக்காகவும் சனநாயக ரீதியில் போராடியும், கவனயீர்ப்பைச் செய்துகொண்டுமிருந்த உறவுகளின் செயற்பாடுகளை முடக்குவதற்கு கங்கணம் கட்டியிருந்த ஆட்சியாளர்களுக்கும் போராட்டங்களால் அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்த கூட்டமைப்பிற்கும் தக்க தருணம் ஏற்பட்டுள்ளது.

அரசபயங்கரவாதத்திற்குள் நசுங்கிக்கொண்டிருந்த தாயகத்தமிழர்கள் தற்போது தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளாலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். பாதிக்கப்பட்ட தாயக தமிழர்கள் பதற்றமான சூழலுக்குள் தவித்துக்கொண்டுதான் உள்ளனர்.

**கேள்வி:- இந்த விடயங்களை தமிழ் மக்களின் ஆணைபெற்றவர்கள் கவனத்தில் கொள்ளவில்லையா?**

பதில்:- 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் மகிந்தராஜபக்ச ஆட்சியிலிருந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய சிந்தனையுடனும் அடிப்டைக் கொள்கையுடனுமே பயணித்தது. ஆனால் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த நிலைமைகள் நேரெதிராக மாறியது. இதனால்த்தான் நாம் அதிலிருந்து வெளியேறினோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அழைத்து வந்த வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்கினேஸ்வரன் வெளியேறினார். இவ்வாறு கூட்டமைப்பு தமிழ்த் தேசியக் கொள்கையிலிருந்து விலகி அரசாங்கத்தின் மீது அபரிதமான நம்பிக்கையை கண்ணை மூடிக்கொண்டு வழங்கியது.


வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கோரிக்கைகள், சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள், பூர்வீக நிலத்திற்காக போராடுபவர்கள் , பேரினவாதத்தின் இனவழிப்பு செயற்பாட்டில் பாதிக்கப்பட்ட மக்களின் நீதிகோரிக்கைகள் என எந்தவொரு விடயத்தினையும் கருத்தில்கொள்ளாது புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்ற ஒரு விடயத்தினை மட்டும் மையமாக வைத்து அரசாங்கத்திற்கு முண்டுகொடுக்கும் செயற்பாடுகளையே தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

ஆனால் புதிய அரசியலமைப்பு ஒருபோதும் வரப்போவதில்லை. இதனை நன்கு உணர்ந்திருந்தும் கூட்டமைப்பு அதனையே முன்னிலைபடுத்திக்கொண்டிருக்கின்றது. தற்போதும் அதுதான் நிலைமை. அரசியலில் அனுபவம் மிக்கவர்கள் என்று கூறுபவர்கள் இவ்வாறு இன்றும் கூறிக்கொண்டிருப்பதை என்னவென்று கூறுவது? ஆனால் மறுபக்கத்தில் அதே கட்சியினைச் சேர்ந்தவர்கள் புதிய அரசியலமைப்பு, இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான பொறுப்புக்கூறல் கிடைக்கப்போவதில்லை என்ற நிலைமையை

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

# மருத்துவராக வரவேண்டிய எனது பிள்ளையின் வாழ்க்கையை ஹஸ்துன் பாவி நாசமாக்கிவிட்டான்.

## புலஸ்தினி சாராவின் கதையைக் கூறி கதறியழுதார் தாய் கவிதா



உயிர்த்த ஞாயிறு தினமன்று நீர்கொழும்பு, கடான, கட்டுவபிட்டிய தேவாலயத்தில் தற்கொலை தாக்குதல் நடாத்தியவர் வாழைச்சேனை, ஏ.எப்.சி. வீதியைச் சேர்ந்த அச்சு முஹம்மது மொஹம்மட் ஹஸ்துன் என அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இவருக்கு உதவியவர்கள் மற்றும் அவரது குடும்ப பின்னணி குறித்தும் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் பிரகாரம், இவருடைய மனைவியே புலஸ்தினி ராஜேந்திரன் என்பவர் (சாரா) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தாக்குதல்களை அடுத்து புலஸ்தினி ராஜேந்திரன் (சாரா) எனப்படுபவரை காவல்துறையினர் வலைவிரித்து தேடிவந்திருந்தனர். மேற்படி நபரை அடைளாயப்படுத்துமாறு காவல்துறையினரால் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்த நிலையில் குருமுதல்வர் அருட்தந்தை ஜேசுதாஸின் கருத்தின் பிரகாரம், உயிர்த்த ஞாயிறு தினமன்று, கிளிநொச்சி,புனித.திரேசாள் ஆலயத்திற்கு புலஸ்தினி ராஜேந்திரன் (சாரா) வருகை தந்திருந்ததையும், பின்னர்



அவர் எதுவுமே பேசாது சென்றிருந்ததையும் அவதானித்திருந்தேன் என்று கூறியிருந்தார்.

சாய்ந்தமருது, வொலிவேரியன் வீட்டுத்திட்டத்தில் உள்ள வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டோரில் புலஸ்தினி ராஜேந்திரன்(சாரா) என்பவரும் உள்ளடங்குவதாக காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், புலஸ்தினி ராஜேந்திரன் எப்படி சாராவானார், அவருடைய குடும்ப பின்னணி என்ன என்பது குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவருடைய தாயாரான கவிதா ராஜேந்திரனை இலக்கு ஊடகவியலாளர் அணுகியிருந்தார். புலஸ்தினி சாராவானதால் பெரும் சோகத்திற்கு உள்ளாகியிருந்த அவருடைய தாயார் கவிதா தீவிரவாத கும்பலுடன் தனது மகளுக்கு தொடர்பிருப்பதாக வந்த தகவலால் பேரதிர்ச்சிக்கு உள்ளாகியிருந்தார். தற்போது சாய்ந்தமருதுவில் தனது மகள் இறந்து விட்டார் என்ற அறிவிப்பு கிடைத்ததும் உணர்ச்சிகளற்று உறைந்து போய்விட்டார்.

அத்தகைய சூழலில் கண்ணீர் பெருக்கெடுத்தோட, தளதளத்த குரலில் சோகத்தையும், இழப்பையும், வேதனையையும், ஆதங்கத்தையும் ஒரு மூச்சிலேயே கொட்டித்தீர்த்து விட்டார். எது எப்படியிருந்தாலும், பெற்றதாய் பிள்ளையை பறிகொடுத்து இன்று வெறுங்கையுடன் நிற்கும் துர்ப்பாக்கிய உணர்வை புரிந்தவர்களாக அவருடைய கருத்துக்களை அப்படியே வழங்குகின்றோம்,

“அம்மா... உங்களுடைய குடும்பத்தைப் பற்றி உங்கள் மகளைப்பற்றி கூறுங்களேன்” என்றபோது,

“என்னத்தைச் சொல்ல, என்னுடைய மகளையே பறிகொடுத்திட்டு நிக்கிறன். நாங்க தேத்தா தீவுக்காரங்க. தேத்தா தீவிலதான் பிறந்து வளந்து இருக்கிறம். நான் பெத்த பிள்ள தான். தேத்தாதீவு மகாவித்தியாலத்தில தான் படிச்சுக்கொண்டு இருந்தவா. *O/L* இல் நல்ல ரிசல்ட் எடுத்தவா. ஒரு டொக்டர் ஆக வேண்டும் எண்டு தான் அடிக்கடி சொல்லுவா. அது போலத்தான் படிச்சு எட்டு ‘ஏ’ ஒரு ‘பி’உம் எடுத்து *O/L* இல் நல்லபடியா பாஸ் ஆனவா. பிறகு களுவாஞ்சிக்குடிக்கு மேல படிக்க போயிட்டா. வகுப்புக்கு கல்முனைக்குத்தான் போய் வருவா. ஒரு நாள் எண்ட பிள்ள வீட்டுக்கு வரல்ல. எல்லா இடத்திலையும் தேடினம் கிடைக்கல. நான் சவுதியில வேல செய்யிறன். எனக்கு அறிவிச்ச உடன நான் இங்க வந்தன். எல்லா இடமும் ஏறி இறங்கினன். எண்ட மகள் கிடைக்கவே இல்லை.

திடீரென்று ஒரு ஹோல் வந்தது. எண்ட மகள் மாளிகாவத்தையில இருக்கிறதாக சொன்னார்கள். எஸ்.எல்.ரி.ஜே ராஸிக் பேசுறதாய் சொன்னார். ஹஸ்துன் என்பருடன் மகள் இருப்பதாய் சொன்னார். அவருடன் திருமணம் நடக்கப்போவதாய் சொன்னார். அவர் மதம் மாறிவிட்டதாய் சொன்னார். நான் அதற்கு எதிர்த்தேன். நாங்கள் இந்துக்கள் ஏன் இப்படி மதமாற்ற வேலை செய்கின்றீர்கள் என்று கதறினேன்.

மறுநாளே கொழும்புக்கு போனேன். எண்ட மகளை காட்டும்படி கேட்டேன். மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கும் போனேன் எதுவும் நடக்கவில்லை. வெறுங்கையாய் வீட்டுக்கு வந்தன். பிறகு எண்ட மகள் போனில அடிக்கடி பேச ஆரம்பிச்சா. ஹஸ்துனுடன் இருக்க முடியாது தன்னை கொடுமைப்படுத்துவதாய் சொன்னா.

எங்களோடயே வந்துவிடு என்று மகளிட்ட கேட்டன். மகள் ஒரு நாள் என்னட்ட வந்தா. நான் ஊரில வைச்சிருந்தா பல கதைகள் வரும் என்கிறதால என்னோடயே விசா எடுத்து கூட்டுக்கொண்டு போய் விட்டேன். நான்கு மாதம் அங்க நல்லபடியா இருந்தா. தான் ஊருக்கு போய் படிக்கப்போறன் எண்டா. மகளை முதலில் அனுப்பினன். எனக்கு சுகமில்லாமல் வரவும் திரும்பவும் நானும் ஊருக்கு வந்தன்.

ஒருநாள் எனக்கு கொஞ்சம் வருத்தமாய் இருக்க நான் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு போனேன். மகளும் என்னோடுதான் வந்தா. டொக்டரிட்ட போய்ட்டு வந்து பாத்தன். எண்ட மகள காணல. வெளியில வந்து ஓட்டோகாரரிட்ட கேட்டன். யாரோ கூட்டிக்கொண்டு போகினம் எண்டார்கள். காவல் நிலையத்துக்கு போனன். அவர்கள் கைவிரித்து விட்டார்கள்.

திரும்பவும் ராஸிக்குடன் பேசினேன். அப்போது எனது மகளுக்கு 18 வயது ஆகிவிட்டதால் அவ மேஜர். திருணம் செய்து வைக்கப்போறன் எண்டு திரும்பவும் சொன்னார் ராஸிக். நான் அவரை கண்டபடி திட்டினேன். எனது மகளுக்கு நீ எப்படி திருமணம் செய்து வைக்கலாம் எண்டு கேட்டன். கொழும்புக்கு வந்தன். ராஸிக்கிண்ட காலில் விழுந்து அழுதன். ஆனால் எதுவுமே நடக்கல.

அது 2016 இல் நடந்தது. அதுக்கு பிறகு நான் எண்ட பிள்ளைய காணவே இல்லை. அவாவை மல்வானையில வைத்திருக்கினம் எண்டு சொல்லிச்சினம். மருதமுனையில இருக்கிறதா சொல்லிச்சினம். ஆனால் நான் காணவே இல்லை. கொஞ்ச மாசத்துக்கு முன்னால எனக்கு பர்தா அணிந்த புகைப்படமொன்றை மகள் போனுக்கு அனுப்பி வைச்சிருந்தா.

அந்த படம் தான் நான் கடைசியாய் பார்த்தது. அதக்கு பிறகு எண்ட மகளை எண்ட பிள்ளைய காணவே இல்லை. 2019 பெப்ரவரி 19ஆம் திகதி தான் அவா என்னோட கடைசியா கதைச்சா. இரண்டாம் தரமும் ஹஸ்துனிட்ட போன பிறகு அவன் தன்ட போனில தான் என்னோட பேசக்கொடுப்பான். அவன் தான் எண்ட பிள்ளையின்ட வாழ்க்கையை கெடுத்திட்டான்.

கடைசியாய் மகள் என்னோட கதைக்கேக்க தான் கஷ்டப்படுகிறதாயும் தனக்கு பணம் தருமாறும் கேட்டா. நான் போன ஐந்தாம் திகதி ஊருக்கு வந்தன். ஆனால் மகளை தொடர்பு கொள்ளவே முடியல. இப்ப என்ட பிள்ளைய பறிகொடுத்துட்டு நிக்கிறன். எண்ட பிள்ளைக்கு உண்மையாய் என்ன நடந்தது எண்டு திருப்பியும் விசாரியுங்கோ எண்டு தான் கேட்கிறன்” என்று கையெடுத்துக் கூப்பியவாறு மயிர்க்கூச்செரிய கதறியழுதார் புலஸ்தினியின் அம்மா கவிதா ராஜேந்திரன்.

# இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்கள் தமிழர்களின் நீதிக்கான பயணத்தில் மிகப்பெரும் தடைகளை ஏற்படுத்தியுள்ளன.

## சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் அருட்தந்தை ஆ.குழந்தை பேட்டி

**கேள்வி: இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதலில் 300க்கும் அதிகமான மக்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 500க்கும் மேற்பட்ட மக்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த கொடூர சம்பவமானது உலகமக்களிடையே மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கொடுமையான சம்பவம் குறித்து தங்களின் கருத்து?**

இந்த தாக்குல் காட்டுமிராண்டித்தனமான செயலாகும். மனித மாண்பினைக் கொண்ட எந்த மனிதர்களும் இவ்வாறான கொடும் செயலை செய்யமாட்டார்கள். உலகத்தில் உள்ள அனைத்து மதங்களும் அன்பையும் ஈகத்தையும் போதிக்கின்றன. மதங்கள் போதிக்கின்ற உண்மையான உட்பொருளை உணர்ந்த எவரும் இவ்வாறான தாக்குதலை செய்யமாட்டார்கள், செய்ய விரும்பவும் மாட்டார்கள். இந்த தாக்குதலில் உயிரிழந்த அனைத்து மக்களுக்கும் நாங்கள் கண்ணீர் மல்க மன்றாடுகின்றோம். எங்கள் அனைவரின் கூட்டு வழிபாடு பாதிக்கப்பட்டவர்களை உண்மையில் மீண்டெழச்செய்யும். அதற்கு முழு ஆற்றலை இறைவன் நிச்சயம் வழங்குவார். அப்பாவி மக்களை கொலை செய்வது இறைவனுக்கு, மனசாட்சிக்கு, இயற்கைக்கு எதிராக செய்யும் குற்றமாகும். தாக்குதல்களில் இறந்து போனவர்களை இழந்து தவிக்கும் உறவினர்களுக்கு இறைவன் உடனிருந்து, ஆறுதலாகவும் ஆற்றலாகவும் செயற்பட்டு, தாங்க முடியாத வேதனையை தாங்கி வாழும் வழியை காட்டுவாராக. எங்களது மன்றாட்டு என்றும் உங்களோடு இருக்கும்.



2009 பின்னர் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிமாகிக்கொண்டிருக்கிறது. இது அமெரிக்கா, இஸ்ரவேல், இந்தியா உள்ளிட்ட நாடுகளிற்கு மிகப்பெரிய தலைவலியாக இருக்கிறது. இந்ததாக்குதலின் பின்புலத்தில் ஒரு புவியியல் நலன்சார் வாய்ப்புகள் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது .சீனாவின் மேலாதிக்க கனவு திட்டமும் அமெரிக்காவின் நீண்டநாள் கனவாகவுள்ள இலங்கையில் அமெரிக்க இராணுவ தளத்தை அமைப்பது என்ற மேலாதிக்க சிந்தனையும் இலங்கை அதிகார வர்க்கத்திடம் எழுந்துள்ள மோதல் போக்குகளும் இந்த கொடூர தாக்குதல்களின் நோக்கங்களும் ஒரே நேர்கோட்டில் இருப்பதாக எழும் விமர்சனங்களும் பொது வெளியிலே முன்வைக்கப்படுவதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வல்லாதிக்க நாடுகள் தமது வலுச்சமநிலையை முன்னிலைப்படுத்துவதற்காக இலங்கையை ஒரு போர்க்களமாக பயன்படுத்துகின்றன. இலங்கை தெரிந்தும் தனது பொருளாதார நலன்களுக்காக இந்தபோர் வன்முறைக்கு துணைபோவது கவலையாக இருக்கிறது. இவர்களது அதிகார மோகம் தீரும்வரை இப்படிபட்ட சம்பவங்கள் நடைபெறும். தொடர்குண்டு வெடிப்புகள் நடைபெறப் போகின்றதென்று கூறி எவரும் இலங்கைக்கு செல்லக் கூடாதென அமெரிக்காவும் அவுஸ்ரேலியாவும் மக்களைத் தடைசெய்கின்றன.

**கேள்வி:இலங்கையில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதல் கிறிஸ்த்தவர்களுக்கு எதிரானது என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதும் தமிழ்க் கிறிஸ்த்தவர்கள் அதிகம் வழிபடும் தேவாலயங்களும் வழிபடும் நேரங்களும் தற்கொலைதாரிகளின் இலக்காக இருந்தமைக்கு என்ன காரணம்? தாக்குதல் குறித்து தங்களுக்கு முன்னரே தெரியும் என்று இலங்கை அரச தலைவர்கள் கூறும் நிலையில் இந்த விடயத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

தமிழ்க் கிறிஸ்தவரின் இறப்பின் எண்ணிக்கையை அதிமாக்கினால் இலங்கைக்கு ஆதாயம் கிடைக்கிறது. தமிழர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்பதைவிட இல்லாமல் செய்ய வேண்டும் என்பது இலங்கை அரசின் நீண்ட கால திட்டம். இந்த திட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே முள்ளிவாய்க்காலில் அரங்கேறியுள்ளது. இருக்கின்ற தமிழர்களையும் அழிப்பதற்கான புதிய வழிமுறைகள் குறித்து சிங்களதேசம் சிந்தித்து வரும் நிலையிலேயே இந்த தாக்குதலின் தெரிவுகள் பெரும்பாலும் தமிழ் கிறிஸ்தவர்களாக இருந்துள்ளனர். இங்கு இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். மனித உரிமைகள் விடயத்திலே ஆசிய நாடுகளைவிட மேற்குலக நாடுகளே இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் வெளிநாட்டவர்களை கொலை செய்தால் மேற்குலகத்தின் முழுமையான ஆதரவை பெறலாம் என்ற எண்ணத்தில் தங்கும் விடுதிகள், தேவாலயங்கள் ஆகியவற்றை தாக்கியுள்ளனர். ஏற்கனவே தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியருக்கும் உள்ள சிறிய முரண்பாட்டை இன்று பௌத்த பேரினவாதம் தீவிரப்படுத்தி, வெளித்தோற்றத்தில் மத முரண்பாடுகள் தெரிந்தாலும் அங்கு சிறுபான்மை சமூகங்களாக வாழும் தமிழ் முஸ்லீம் சமூகங்களை முழுமையாக அழித்தொழித்து ஒட்டுமொத்த இலங்கை தீவையும் தனதாக்கவேண்டும் என்ற இலங்கையின் கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு மதம் என்ற பெயரால் அறிவற்ற சில கயவர்கள் துணைபோயுள்ளார்கள்.

இலங்கை அரசத்தலைவர்களின் முழு பங்களிப்புடனேயே இந்த தாக்குதல் இடம்பெற்றதால் அவர்களுக்கு முன்னரே தெரியும் என்பது ஒன்றும் புதிதல்ல. அவர்களது



உதவியுடன் இந்த தாக்குதல்கள் நடந்துள்ளன. அதனால்த்தான் நாட்டின் அதிபர் நாட்டில் இல்லை. இதைவிட கிறிஸ்தவ அரசியல் தலைவர்கள் எவரும் அன்றைய தினம் தேவாலயங்களுக்கு செல்லவில்லை. அவர்கள் ஆறு திங்கள் முன்னதாக நாட்டிற்கு வந்து, அனைத்து ஏற்பாடுகளையும் செய்து நடத்த, அந்த ஆளும் அரசு உதவி செய்துள்ளது. ஆளும் அரசின் பேராதரவுடன் இந்த தாக்குதல் நடந்துள்ளது. சமயத்தின் பெயரால் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் தமிழ் இஸ்லாமியர்களுக்கும் இடையே கலவரத்தை தூண்டிவிட்டு ஆளும் அரசு அதிகாரத்தில் இருந்து பயனடையலாம் என்ற எண்ணத்துடன் அரசு செயற்பட்டது. மிகவும் கொடுமையான நீதிக்கு புறம்பான ஆட்சியில் எதுவும் நடக்கலாம் என்பதற்கு இலங்கையில் இடம்பெற்ற கொடூர தாக்குதல்கள் ஒரு சாட்சியாக அமைந்துள்ளது.

**கேள்வி: இலங்கையில் அமைதி திரும்பி விட்டதாகவும் அங்கு வாழும் மக்களின் பாதுகாப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு தெரிவித்து வந்துள்ள கருத்துகளை தற்போது இடம் பெற்ற தாக்குதலானது பொய்யாக்கியுள்ளது. அங்கு வாழும் மக்களுக்கும் அங்கு செல்லும் மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்பது தொடர்பில் உங்களின் பார்வை என்ன?**


இலங்கையின் உள்நாட்டு தலைவர்களின் அதிகார வெறி தீரும் வரை இலங்கையில் ஒருபோதும் அமைதி திரும்பாது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்ற முது மொழிக்கு ஏற்ப இலங்கையில் இரண்டு சமயக் குழுக்கள் சண்டையிடும் போது அதிகார வர்க்கத்திற்கு ஆதாயம் கிடைக்கிறது. இந்த நாடுகள் அமைதி திரும்பாமல் இலங்கை இருக்கவேண்டுமென்று விரும்புகின்றன. வெறுப்பு அரசியலையும் பகைமை உணர்வையும் வளர்த்து அதிகாரத்தை தேடிக்கொள்கின்றன. அதனால் அமைதி வருவது மிகவும் கடினமாகும். தமிழர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது இயலாத செயலாக மாறிவிடுகின்றது.

**கேள்வி: ஈழத்தின் உண்மை நிலவரங்களை அறியும் நோக்குடன் அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து இலங்கை சென்ற நிபுணர் குழுவில் நீங்களும் ஒருவர் என்ற வகையில் அங்குள்ள உண்மை நிலவரங்கள் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகள் எவை?**

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

# 'ஏப்ரல் 21' ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள்

பூமிகன்



'தேசிய தௌஹீத் ஜமா-அத்' அதிரடியாக ஏப்ரல் 21 இல் இலங்கையில் நடத்திய தாக்குதல்கள் கள நிலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. உள்நாட்டு அரசியலில் இது ஏற்படுத்தப்போகும் தாக்கம் என்னவாக இருக்கும் என்பது ஒருபுறம் ஆராயப்பட வேண்டும். இலங்கை குறித்த சர்வதேச உறவுகளிலும் இது ஒரு வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும்.

'செப்டம்பர் 11' சர்வதேச ஒழுங்கமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக 'பயங்கர வாதத்துக்கு எதிரான போர்' என்ற போர்வையில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் ஒரு 'புதிய' யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அது காரணமாக அமைந்தது. பயங்கரவாத அமைப்புக்களுக்கும் விடுதலைப் போராட்ட அமைப்புக்களுக்கும் வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியாமல், இந்தப் போரை அமெரிக்கா தொடுத்தது. அதனை எதிர்கொள்வதற்கான சரியான உபாயத்தை வகுத்துக்கொள்ளாததால், அதன் விளைவுகளை அனுபவித் தவர்கள் ஈழத்தமிழர்கள்.

இப்போது 'ஏப்ரல் 21' தாக்குதல். இதன் மூலம் புதிய போர் முனையொன்றை 'தேசிய தௌஹீத் ஜமா-அத்' திறந்து வைத்திருக்கின்றது. சர்வதேச ரீதியாக பயங்கரவாத அமைப்பாக அறியப்பட்டுள்ள ஐ.எஸ். (இஸ்லாமிய அரசு) அமைப்பின் இலங்கை முகவராக 'தேசிய தௌஹீத் ஜமா-அத்' செயற்படுகின்றது.

'தேசிய தௌஹீத் ஜமா-அத்' அமைப்பு இலங்கையில் புதிதாகத் தோன்றிய ஒன்றல்ல. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான தயாரிப்பு வேலைகள் 7 அல்லது 8 வருடமாக நடைபெற்றிருக்கலாமென முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா கூறியுள்ளார். அவ்வாறாயின் புலனாய்வுதுறையினர் இவ்வளவு காலமும் அறியாது இருந்தனரா? அல்லது அறிந்தும் நடவடிக்கை எடுக்காதிருந்தனரா? என்ற கேள்விகளும் எழுகின்றன. இலங்கையின் புலனாய்வுப் பிரிவினர் இந்தக் குழுவினருடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்ததாகவே தெரிகின்றது. காத்தான்குடியிலுள்ள இவர்களுடைய பள்ளிவாசலுக்கு புலனாய்வுப் பிரிவினர் அடிக்கடி சென்று வந்திருக்கின்றார்கள்.




விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முஸ்லிம் அமைப்புக்கள் பலவும் இராணுவத்துக்கு ஆதரவாகவே செயற்பட்டன. அதனைவிட, புலனாய்வுப் பிரிவிலும் அதிகளவுக்கு முஸ்லிம்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர். முஸ்லிம் அமைப்புக்கள் பயங்கரவாத பயிற்சிகளைப் பெற்றாலும், தமக்கு எதிராகத் திரும்பும் என்பதை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. தமிழர்களுக்குத்தான் அவை அச்சுறுத்தலாக அமையும் என அரசாங்கமும், இராணுவமும் நம்பியிருந்திருக்கலாம்.

இந்த அமைப்பிலுள்ள பலர் வெளிநாடுகளில் வெடி மருந்துகளை தயாரிப்பதற்கும், தாக்குதலை நடத்துவதற்கும், புதியவர்களை மூளை சலவை செய்து தம்முடன் இணைத்துக்கொள்வதற்கும் பயிற்றப்பட்டிருக்கின்றார்கள்.

மிகவும் சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் எவ்வாறு கொண்டுவரப்பட்டன என்பது பாதுகாப்புத் தரப்பைக் குடையும் முக்கியமான கேள்வி. விமான மூலமாக இவை கொண்டுவரப்படுவது சாத்தியமில்லை. இலங்கை ஒரு தீவாக இருப்பதால் கடல் வழியாக இவை கொண்டுவரப்பட்டிருக்கலாம். கடலை முழு அளவில் கண்காணிப்பது சாத்தியமில்லை.

இவற்றை பார்க்கும் போது தேசிய தௌஹீத் ஜமா-அத்' அமைப்பு மிகப்பெரிய வலைப் பின்னலைக் கொண்டதாக இருந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது. ஐ.எஸ். தொடர்பு அதற்கு காரணம். வெடிமருந்துகள், அதற்கான நிதி ஆதாரங்கள், வாகனங்கள், ஆட்பலம், குண்டுகளைச் செய்வதற்கான தொழில் நுட்பம், இரகசிய காப்பிடம், திட்டமிடல் இவ்வாறு பல விடயங்களை இரகசியமாகச் வேண்டும். அதற்கான நிபுணத்துவம் தேவை. இவற்றை பார்க்கும் போது நிச்சயமாக ஒரு வலுவான பின்புலத்தை கொண்ட அமைப்பாக 'தேசிய தௌஹீத் ஜமா-அத்' அமைப்பு தோற்றமளிக்கின்றது.

கடந்த எட்டுவருட காலத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் இவ்வமைப்பு வலுவான முறையில் வேரூன்றியிருப்பதும் தெரிகின்றது. மூளைச்சலவை செய்யப்பட்ட பல இளைஞர்கள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். இவர்களில் பலர் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் எனச் சொல்லப்படுகின்றது. கொல்லப்பட்டவர்கள், பிடிபட்டவர்கள் போக மேலும் சிலர் தலைமறைவாகியுள்ளனர். முஸ்லிம் அரசியல் தலைவர்கள், செல்வந்த வர்த்தகர்கள் பலருடைய ஆதரவும் இவர்களுக்கு இருக்கின்றது.

இதனை முழு அளவில் குறுகியகாலத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது இலகுவானதல்ல. இது தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்திருப்பவை கவனத்துக்குரியது. அவர், "இந்த பிரச்சனை 100 சதவீதம் நிறைவடைந்தது என்ற நிலைக்கு வருவதற்கு நிச்சயமாக இரண்டு வருடங்களாவது பொறுமையாக கடமையாற்ற வேண்டும். அவ்வாறின்றி இந்த பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர இலகு வழிகள் கிடையாது" என்று தெரிவித்திருக்கின்றார். ஆக, பிரச்சினை மேலும் சில மாதங்களுக்குத் தொடரும் சாத்தியங்கள்தான் காணப்படுகின்றன.

தாக்குதல் சம்பவத்தையடுத்து மீண்டும் ஒரு போர்க் காலத்தைப் போல இலங்கை முழுவதும் இராணுவ மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. காணாமல்போயிருந்த இராணுவச் சோதனைச் சாவடிகள் மீண்டும் முளைத்திருக்கின்றன. புதிதாக புதிய இடங்களிலும் இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட்ட வேண்டும் என்ற கோரிக்கையை இனியும் வலுவாக முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. இராணுவம் இருப்பது அவசியம் என்பதை உணர்த்தும் வகையிலேயே அரசாங்கமும், பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுவிழந்தால், காணிகளை விடுவிக்குமாறு எவ்வாறு கோரமுடியும்?

அவசரகாலச் சட்டமும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதால், தமிழ் மக்களுடைய சனநாயகப் போராட்டங்களை ஒடுக்குவது அரசுக்கு சிரமமானதாக இருக்காது. அவசரகாலச் சட்டம் வந்துள்ள நிலையில், கைதிகளின் விடுதலை குறித்தும் குரல் கொடுக்க முடியாத நிலை ஏற்படும். யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கைதுகளை இதற்கான ஆரம்பமாகக் கருதலாம். அதாவது, மக்களை அச்சத்துடன் வைத்திருக்கும் உபாயத்தை அரசு கையாளப்போகின்றது.

அதனைவிட, அரசியல் தீர்வு, அரசியலமைப்புச் சீர்திருத்தம் போன்ற விடயங்கள் குறித்து இப்போதைக்குப் பேச முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. "இஸ்லாமிய தீவிரவாதம்" என்ற சொல்லைப் பயன்படுத்தி தமது பேரினவாத அரசியலை

தொடர்ச்சி 11ஆம் பக்கம் →

10 ஆம் பக்க தொடர்ச்சி →

## ஏப்ரல் 21

முன்னெடுப்பதற்கே சிங்களத் தலைமை முற்படும்.

“ஏப்ரல் 21” தாக்குதல் உள்நாட்டுப் பரிமாணம் ஒன்றைக் கொண்டுள்ள அதேவேளையில், சர்வதேச பரிமாணம் ஒன்றையும் கொண்டிருக்கின்றது. அதாவது, மேற்கு நாடுகளுக்கு அச்சுறுத்தலைக் கொடுக்கும் ‘ஐ.எஸ்.’ இலங்கையில் காலூன்றியிருப்பதுதான் அது. ஆசியாவில் பயங்கரவாத கேந்தரமாக இலங்கை மாறிவருகின்றது என்ற புலனாய்வுத் தகவல்கள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டிருந்தன. இலங்கை அவற்றை அலட்சியப்படுத்தியது. தாக்குதலின் தொடர்ச்சியாக மேற்கு நாடுகளின் புலனாய்வு அமைப்புக்கள் அவசரமாக இலங்கையில் களமிறங்கிவிட்டன.

இலங்கைத் தாக்குதலை தமக்குக் கிடைத்த பாரிய வெற்றியாகக் காட்டிக்கொண்டு ‘ஐ.எஸ்.’ புத்துயிர் பெறுவதை அனுமதிக்க மேற்கு நாடுகள் தயாரில்லை. ‘ஐ.எஸ்.’ அமைப்பின் உள்நாட்டு முகவராகச் செயற்படும் ‘தேசிய தௌஹீத் ஜமா-அத்’ அமைப்பை துடைத்தெறிவதற்குத் தேவையான உதவிகளை வழங்க அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் தயாராக உள்ளன.

இந்த உதவிகளை வழங்கிக்கொண்டு, இலங்கையின் மனித உரிமைகள் குறித்து, சர்வதேச அரங்கில் குரல் கொடுக்க முடியாத நிலை மேற்கு நாடுகளுக்கு ஏற்படும். சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு இணைந்து செயற்படும் நிலையில், இலங்கைப் படையினர் மீதான போர்க் குற்றங்களை சர்வதேச அரங்கில் தூக்கிப்பிடிப்பது மேற்கு நாடுகளுக்கு சாத்தியமில்லாமல் போகலாம்.

இவை ஏப்ரல் 21 தாக்குதலின் விளைவுகள். செப்டம்பர் 11 தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை மோசமாகப் பாதித்தது. இப்போது போர் முடிந்து 10 வருடங்களின் பின்னர் ஏப்ரல் 21 தாக்குதல் தமிழ் மக்களின் சனநாயகப் போராட்டங்களுக்குப் பாதிப்பாக வந்திருக்கின்றது. இதனை விரிவாக ஆராய்ந்து எமது அடுத்த கட்டத்தையிட்டு தமிழ்த் தரப்பினர் திட்டமிடுவது அவசியம்.

9 ஆம் பக்க தொடர்ச்சி →

## இலங்கையில் இடம்பெற்ற

எமது பயணத்தின்போது வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரையும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தோம். குறிப்பாக, இறுதி யுத்தத்திலே பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களை சந்தித்திருந்தோம். அவர்கள் அனைவரும் எம்மிடம் தமது பாதிப்புகள் தொடர்பாக தமது ஆதங்கங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்கள். தம்மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கும் யுத்தத்தில் இழைத்த போர்க்குற்றங்களுக்கும் ஒருபோதும் இலங்கையின் நீதித்துறை தமக்கான நீதியை வழங்காது. சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் ஒரு பன்னாட்டு விசாரணை மேற்கொண்டால் மட்டுமே தமக்கான நீதி கிடைக்கும் என்பதே அனைவரினதும் கருத்தாக இருந்தது. மேலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது சொந்தங்கள் தொடர்பில் அரசு இதுவரை ஒரு பொறுப்பான பதிலை வழங்கவில்லை என்று ஆதங்கப்பட்டதோடு தாம் இராணுவ கெடுபிடிகளுக்கும் அச்சறுத்தல்களுக்கும் மத்தியிலேயுமே போராடி வருவதாக கூறினார்கள்.

**கேள்வி: தமிழீழ மக்களது கோரிக்கைகளுக்கு மாறாக ஜெனீவாவில் சிறீலங்கா அரசுக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு ஆண்டு கால அவகாசம் என்பது அனைத்துலக சமூகம் தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுத் தரப்போவதில்லை என்ற சந்தேகத்தை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

காலம் தாழ்த்துவது நீதியை மறுப்பதற்கு சமம். கால அவகாசம் தருவது இழிவான செயலாகும். நீதியற்ற நடைமுறையாகும். கால அவகாசம் உரிமையுடன் நீதிகோரும் மக்களின் உயிரை பறிப்பதாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை உடனடியாக வழங்க வேண்டியதே ஐ.நாவின் பொறுப்பாகும். கால அவகாசம் தங்களது கடமையை மறந்து, தங்களது அநீதியான செயல்களை நீதியான செயல்களாக மாற்றுவதற்கு உதவுகின்றன. காலம் தாழ்த்துவது உண்மைகளையும் குற்றங்களையும் மறைப்பதற்கு உதவுகிறது. இதில் தமது நலன்களுக்காக அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகள் சர்வதேச அரங்கில் இலங்கையை பாதுகாத்து வருகின்றன. தற்போதைய தாக்குதல்கள் இலங்கைக்கு மேலும் ஆதரவான நிலையை சர்வதேச மட்டத்தில் உருவாக்கியுள்ளது. இது தமிழர்களின் நீதிக்கான பயணத்தில் மிகப்பெரும் தடைகளை ஏற்படுத்துவதோடு இலங்கையில் சிறுபான்மை சமூகங்களை மேலும் ஒடுக்குவதற்கான சூழ்நிலையையே ஏற்படுத்தியுள்ளது. அதிகாரவெறி பிடித்த நாடுகள் இலங்கையில் அமைதியை கொண்டுவந்து, தமிழர்களை உரிமையுடன் வாழ தடைபோடுகின்றன.

7 ஆம் பக்க தொடர்ச்சி →

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின்

உணர்ந்துள்ளனர். அத்தகையவர்கள் ஏற்கனவே ஒக்டோபரில் நடைபெற்ற சனாதிபதி மைத்திரியின் அரசியல் புரட்சியை காரணம் காட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இந்த தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் காரணம் கூறுவதற்கான மேலும் ஒரு வலுவை வழங்கியுள்ளது. அண்மைய நாட்களிலேயே ஒக்டோபர் புரட்சியும், தற்கொலை தாக்குதல்களும் தான் அனைத்தையும் சிதைத்துவிட்டது என்று இட்டுக்கட்டி தமிழ் மக்களை மீண்டும் ஒருமுறை ஆணைகோருவதற்கான ஏது நிலைகளை உருவாக்குவதற்காக ஏமாற்ற விளைகின்றார்கள். கூட்டமைப்பு தமிழ்மக்களின் நீதிக்கான கோரிக்கை, உரிமைக்கான கோரிக்கைகளை எல்லாம் மறந்து அடுத்த தேர்தலில் தாயகத்தில் தனது இருப்பினை எவ்வாறு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என்பதற்கான கங்கரியச் செயற்பாடுகளில் தான் தற்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது என்பதே யதார்த்தம்.

தீவிரவாதத்தாக்குதல்களின் பின்னர்தான் சனாதிபதி, பிரதமர், இராணுவத்தளபதிகள் உள்ளிட்ட அனைவரும், விடுதலைப்புலிகள் உட்பட தமிழீழ விடுதலை அமைப்புக்கள் அனைத்துமே விடுதலை என்ற இலக்குடன் தான் போராட்டத்தினை முன்னெடுத்தார்கள். அதற்கு மக்களின் ஆதரவு இருந்தது என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆகவே எமக்கு விடுதலைதான் இலக்கு என்பதை சிங்கள,பேரினவாதத்தவர்களே தற்போது ஏற்றுக்கொண்டிருக்கையில் அந்த விடுதலைக்கான கோரிக்கையை தமிழ் மக்களின் ஆணைபெற்ற அனைவரும் வலுவாக முன்வைக்க வேண்டும் அல்லவா? அதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதல்லவா? ஆனால் கூட்டமைப்பு அதற்கு தயாராக இல்லையே.

**கேள்வி:- வவுனியாவில் அகதிமுகாம் அமைப்பதற்கு எதிர்ப்புத்தெரிவித்து கருத்துக் களை முன்வைத்திருந்தீர்களே அதன் பின்னணி என்ன? எழுநூறு வெளிநாட்டுப் பிரசைகளை வவுனியாவில் தங்க வைப்பதற்கான செயற்பாடு தொடர்பாக**

கொழும்பில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகளை அவர்களின் பாதுகாப்பு கருதி வவுனியாவில் உள்ள இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தற்போது இருக்கும் பூந்தோட்டம் கூட்டுறவு கட்டிடம், செட்டிகுளம் மெனிக்பாம் மற்றும் பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் அமைந்துள்ள அரச கட்டிடம் போன்ற பகுதிகளில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

வெளிநாட்டு பிரசைகள் அகதிகளாக இருந்தால் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் இவர்களை அணுகவேண்டும் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் தற்போது நாட்டில் நிலவியுள்ள அசாதாரண சூழ்நிலையின்போது இங்கே இவர்களை தங்க வைப்பது என்பது இப்பிரதேச மக்கள் மத்தியில் தேவையில்லாத குழப்பங்களையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்துவதாகவே அமையும்.

பல பிரச்சினைகளுக்கு வடக்கு கிழக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றார்கள். இந்த நிலையில் வெளிநாட்டுப் பிரசைகளை வவுனியாவில் தங்க வைப்பது என்பது எமது இளைஞர் யுவதிகளை மீண்டும் நெருக்கடிக்குள் இட்டுச்செல்வதற்கான பொருத்தமற்ற செயற்பாடாகும். எனவே யுத்தம் நடைபெற்ற வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இவர்களை தங்க வைப்பதே பொருத்தமானதாகும். இந்த விடயத்தினை சனாதிபதி, பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளேன். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மற்றும் வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோர் இதற்கு பச்சைகொடி காட்டியுள்ளதாக அறிய முடிகின்றது. வடக்கில் அத்துமீறி நடக்கும் சிங்கள பௌத்த, ஆக்கிரமிப்புக்களில் ஒன்றையேனும் தடுத்து நிறுத்த துணிவற்ற இவர்கள் மக்களின் விருப்புக்கு மாறாக எவ்வாறு இத்தகைய பாரிய விடயங்களை ஆமோதிக்கலாம்.

**கேள்வி:-யாழ்.பல்கலைக்கழக மணவர்களின் கைதின் பின்னணி என்ன?**

பதில்:- முதலாவதாக இதுவொரு திட்டமிட்ட செயற்பாடாகும். பல்கலைக்கழக மாணவர்கள் எப்போதும் தமது இனம்சார்ந்த விடுதலைக்கு போராடியே வந்துள்ளார்கள். அவ்வாறு தான் காணாமல்போனவர்களுக்கான நீதிகோரல், அரசியல் கைதிகள் விடுதலை, சர்வதேசம் அரசாங்கத்திற்கு கால நீடிப்பு வழங்குதலுக்கு எதிரான குரல் ஆகிய விடயங்களில் முழு வீச்சில் அண்மைக்காலமாக செயற்பட்டு வந்துள்ளார்கள். குறிப்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் இந்த பற்றுதிமிக்க செயற்பாடுகள் கூட்டமைப்பிற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் குடைச்சலாகவே இருந்தது. அதுமட்டுமன்றி கடந்த ஆண்டைப்போன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை உணர்வு ரீதியாக மேற்கொள்வதற்கும் இம்முறை பல்கலைக்கழக தரப்புக்களே முன்னின்று உழைக்க ஆரம்பித்திருந்தன. ஆகவே இது ஒரு கல்லில் இருமாங்காய் என்பது போல் பல்கலை மாணவர்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களை விடுத்து அரசாங்கமும் கூட்டமைப்பும் தப்பிக்கொள்வதே பின்னணியாகும்.



# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை அதிர்ச்சியில் அமெரிக்கா

வடகொரியா மீண்டும் ஏவுகணைகள் சோதனையை தொடங்கி உள்ளது. இது அமெரிக்காவுக்கு கடும் அதிர்ச்சியை அளித்து இருக்கிறது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலும், அமெரிக்காவும் விதித்த பொருளாதார தடைகளை மீறியும், உலக நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வட கொரியா தொடர்ந்து அணு ஆயுதங்களையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் சோதித்து வந்தது. இது அமெரிக்காவுக்கும், வட கொரியாவுக்கும் இடையே தீராப்பகையை ஏற்படுத்தியது. ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி , சிங்கப்பூரில் உச்சி மாநாடு நடத்தி அமெரிக்க சனாதிபதி டிரம்பும், வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன்னும் சந்தித்து உலகளவில் பரபரப்பை ஏற்படுத்தினர். அது மட்டுமின்றி, கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதங்கள் இல்லாத பகுதியாக மாற்ற வடகொரியா முன்வந்தது. இதையொட்டி இரு தரப்பிலும் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதைத் தொடர்ந்து அணு ஆயுதங்களை கைவிடுவதற்கு வடகொரியா ஆக்கபூர்வமான வகையில் பெரிய அளவில் நடவடிக்கை எடுக்காதபோதும், ஏவுகணை சோதனைகளை நிறுத்தியது.

இந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 27, 28 ஆம் திகதிகளில் வியட்நாம் தலைநகர் ஹனோயில் மீண்டும் உச்சி மாநாடு நடத்தி இரு தலைவர்களும் சந்தித்து பேச்சு நடத்தினர். ஆனால் இந்தப் பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது. இந்த நிலையில் வடகொரியா மீண்டும் ஏவுகணைகள் சோதனையை தொடங்கி உள்ளது. நேற்று காலை அங்குள்ள கிழக்கு கடலோர நகரமான வோன்சான் அருகே அமைந்துள்ள ஹோடோ தீபகற்ப பகுதியில் இருந்து குறைந்த இலக்கில் சென்று தாக்குதல் நடத்துவதற்கு ஏற்ற பல ஏவுகணைகளை வடகொரியா சோதித்து பார்த்தது. இந்த தகவலை தென்கொரியாவின் ராணுவ பணியாளர்களின் கூட்டுத்தலைமை தெரிவித்தது. வட கொரியா ஏவிய ஏவுகணைகள் அனைத்தும் கிழக்கு கடலை நோக்கி 70 முதல் 200 கி.மீ. தொலைவுக்கு பாய்ந்ததாக அந்த தகவல் மேலும் கூறுகிறது. தென் கொரியாவின் வெளியுறவு மந்திரி காங் கியூங் வா, “பொருளாதார தடைகளில் இருந்து வட கொரியா நிவாரணம் பெற வேண்டுமானால், அந்த நாடு அணு ஆயுதங்களை கைவிடுவதற்கு நேரில் காணத்தக்க, உறுதியான, வலுவான நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த நிலையில், வடகொரியா நேற்று ஏவுகணை சோதனைகளை தொடங்கி இருப்பது அமெரிக்காவை அதிர வைத்துள்ளது. வடகொரியாவின் துணை வெளியுறவு அமைச்சர் சோ சன் ஹூய், “ பொருளாதார தடை விவகாரத்தில் அமெரிக்கா சற்று தாராளத்துடன் நடந்து கொள்ளாவிட்டால், அமெரிக்கா மோசமான முடிவை சந்திக்க வேண்டி வரும்” என இந்த வார தொடக்கத்தில் எச்சரிக்கை விடுத்திருந்ததும் நினைவு கூரத்தக்கது.

வடகொரியாவின் ஏவுகணைகள் சோதனையைத் தொடர்ந்து, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோவை தென் கொரியாவின் வெளியுறவு அமைச்சர் காங் கியூங் வா தொலைபேசியில்தொடர்பு கொண்டு பேசினார். அப்போது வட கொரியா மீண்டும் ஏவுகணைகள் சோதனை நடத்தி



இருப்பது பற்றி எடுத்துக்கூறினார்.

வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனைகளை நடத்தி இருப்பது தங்களுக்கு தெரியும் என்று வாஷிங்டன் வெள்ளை மாளிகை அறிவித்தது. வடகொரியாவின் ஏவுகணைகள் சோதனையை தொடர்ந்து நிலைமையை உற்று நோக்கி கவனித்து வருகிறோம் என குறிப்பிட்டார்.

## ஆப்கானிஸ்தான் - இராணுவ தாக்குதலில் 2 தலிபான் தலைவர்கள் உள்பட 52 தீவிரவாதிகள் பலி

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் தீவிரவாதிகளுக்கும், அரசு படையினருக்கும் இடையே தொடர்ந்து நீண்டகால போர் நீடித்து வருகிறது. தீவிரவாத குழுக்களை அமைதி பேச்சுவார்த்தைக்கு வரும்படி அதிபர் விடுத்த அழைப்பு தோல்வியில் முடிந்தது. ஆனாலும் தலிபான் தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர்.


இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் கஸ்னி மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் பதுங்கியுள்ள தலிபான் தீவிரவாதிகளை குறிவைத்து அந்நாட்டு ராணுவம் வான்வெளி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் அபு காலித் மற்றும் குமாண்டன் சர்ஹாதி ஆகிய 2 தலிபான் தலைவர்கள் உள்பட 52 தீவிரவாதிகள் கொல்லப்பட்டு உள்ளனர் என ராணுவ அமைச்சகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## ஹமாஸ் - இஸ்ரேல் தாக்குதலில் 5 பேர் உயிரிழப்பு

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கிடையிலான காசா முனையில் இருந்து இஸ்ரேல் நாட்டின்மீது இங்குள்ள ஹமாஸ் போராளிகள் அவ்வப்போது ராக்கெட் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கு பதிலடியாக காசா நகரின்மீது இஸ்ரேல் நாட்டு போர் விமானங்களும் குண்டுமழை பொழிவதுண்டு. அவ்வகையில், காசா முனையில் இருந்து இஸ்ரேல் நாட்டின் மீது நேற்று ஹமாஸ் போராளிகள் சுமார் 500 ராக்கெட்டுகளை ஏவி மிகப்பெரிய தாக்குதல் நடத்தியதாகவும், அவற்றில் பலவற்றை தங்களது ஏவுகணைகள் இடைமறித்து அழித்ததாகவும் இஸ்ரேல் அரசு தெரிவித்திருந்தது. , இந்த தாக்குதலில் இஸ்ரேலில் சில வீடுகள் சேதமடைந்ததாகவும் ஓரிருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில், இஸ்ரேல் இன்று நடத்திய எதிர் தாக்குதலில் ஒரு கர்ப்பிணி, 13 மாத கைக்குழந்தை உள்பட பாலஸ்தீனத்தை சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேல் ராணுவத்துக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையில் கடந்த ஆண்டு மே மாதம் நடந்த உச்சகட்ட மோதலில் 270-க்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொன்று குவிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

## பாம்பை வைத்து வித்தை காட்டியவரின் கழுத்தை இறுக்கிக் கொன்ற பாம்பு

ரஷ்யாவில் பாம்பை வைத்து வித்தை காட்டிய ஒருவர், அதே பாம்பால் கழுத்து இறுக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இரு தினங்களுக்கு முன்பு ரஷ்யாவில் ஒரு வீடியோ வேகமாக பரவியது. அந்த வீடியோவில், ஒரு மலை பாம்பை வைத்து வித்தைக் காட்டிக்கொண்டிருக்கிறார். பாம்பை தனது கழுத்தை சுற்றி இருக்க, அதன் தலையை கையில் பிடித்திருக்கிறார். திடீரென சரிந்து கீழே விழுகிறார். தனது வலது கையால், தனக்கு நேர்ந்த ஆபத்து குறித்து சமிஞ்ஞை செய்கிறார். இதையடுத்து, அந்த சர்க்கஸில் உள்ள மற்றவர்கள், ஓடிவந்து அந்த பாம்பை அவரது கழுத்தில் இருந்து விடுவிக்கின்றனர். இருப்பினும் அவர் சுயநினைவு இல்லாமல் தரையில் சரிந்து கிடக்கிறார். பாம்பினால் தாக்கப்பட்ட அவர் உயிர் பிழைத்தாரா இல்லை மரணமடைந்துவிட்டரா என்பதில் குழப்பம் நீடிக்கிறது. காரணம். இதுபோன்ற ஒரு சம்பவம் இங்கு நடைபெறவே இல்லை என டாகஸ்தான் காவல்துறை தெரிவித்துள்ளனர். இருப்பினும் ஊடகங்களின் அறிக்கைப்படி, அவர் உயிரிழந்துவிட்டதாகவே தெரிகிறது. நெஞ்சை உறைய வைக்கும் இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.



# உக்ரேனில் உக்கிரமடையும் வல்லரசுப் போட்டி



உக்ரேனில் சனாதிபதி தேர்தல் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி நடந்து முடிந்தவுடன் அதை மையப்படுத்தி இரசியாவும் அமெரிக்காவும் அரசுறவியல் நகர்வுகளை செய்துள்ளன. அரசியல் கற்றுக் குட்டியான புதிய சனாதிபதி ஜெலென்ஸ்க்கியின் அரசியல் அனுபவம் நகைச்சுவை நாடகத் தொடரில் அதிபராக நடித்தது மட்டுமே. உக்ரேன் தேர்தலில் இரசியாவால் பெரும் பாதிப்புக்கள் எதையும் ஏற்படுத்த முடியவில்லை. ஒரு வல்லரசு நாட்டின் எல்லையில் இருக்கும் நாட்டில் நடக்கும் தேர்தலில் அந்த வல்லரசு நாட்டால் தாக்கத்தை ஏற்படுத்த முடியாவிடில் அந்த நாட்டின் வல்லரசு நிலை கேள்விக் குறியாகிவிடும்.

2014-ம் ஆண்டு இரசியா உக்ரேனின் ஒருபகுதியாக இருந்த கிறிமியாவை தன்னுடன் இணைத்ததைத் தொடர்ந்து உக்ரேன் வல்லரசு நாடுகளின் போட்டிக் களமானது.

## இரசியாவிற்கு உக்ரேனின் முக்கியத்துவம்

உக்ரேனும் அதன் ஒரு பகுதியான கிறிமியாவும் சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்தன. கிறிமியா இரசியாவின் வசம் இல்லாவிடில் இரசியாவிற்கு ஒரு காத்திரமான கடற்படை இல்லை என்ற நிலை உருவாகிவிடும். உக்ரேன் இரசியாவின் எதிரிகளின் கையில் இருந்தால் இரசியா ஒரு வல்லரசு இல்லை என்ற நிலை உருவாகும். சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் உக்ரேன் தனி நாடாக உருவானபோது அதன் ஒரு பகுதியான கிறிமியாவில் இரசியக் கடற்படை இருக்க ஒத்துக் கொள்ளப்பட்டது.

## இரசியாவின் மீள் விரிவாக்கம்

இரசியா தனது ஆதிக்க நிலப்பரப்பை விரிவாக்குவதற்கு சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் என்னும் கூட்டமைப்பை 1991ஆம் ஆண்டின் இறுதியில் உருவாக்கியது. இதில் ஆர்மினியா, அஜர்பைஜான், கஜகஸ்த்தான், கிர்க்கிஸ்த்தான், மோல்டோவா, தேர்க்மெனிஸ்த்தான், தஜிகிஸ்த்தான், உஸ்பெக்கிஸ்த்தான்,உக்ரேன் ஆகிய நாடுகள் இணைந்தன. 1993ஆம் ஆண்டு ஜோர்ஜியாவும் இணைந்து கொண்டது. உக்ரேன், ஜோர்ஜியா, தேர்க்மெனிஸ்த்தான்ஆகிய நாடுகளில் நடந்த ஆட்சி மாற்றத்தால் அவை சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்தில் இருந்து வெளியேறின. சுதந்திர நாடுகளின் பொதுநலவாய நாடுகளிடையே ஒரு சுதந்திரவர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திட இரசியா முயற்சித்த போதும் அதற்கு சில நாடுகள் ஒத்துக்கொள்ள மறுத்தன. 2013ஆம் ஆண்டு உக்ரேன், இரசியா, மோல்டோவா, ஆர்மீனியாஆகிய நாடுகள் ஒரு பொது சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டன. தனது எல்லையில் உள்ள நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதைத் தடுக்கவே இரசியா சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்தை உருவாக்கியது. ஜோர்ஜியாவும் உக்ரேனும் ஐரோப்பிய ஒன்றியத்திலோ அல்லது நேட்டோவிலோ இணைவதை இரசியா கடுமையாக எதிர்த்தது.

## உக்ரேனும் ஜோர்ஜியாவும்

ஜோர்ஜியா நேட்டோவிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் இணைய எடுத்த முயற்சிகளை இரசியா கடுமையாக எதிர்த்தது .ஜோர்ஜியாவில் பிரிவினைவாதத்தை ஊக்கிவித்ததுடன் ஜோர்ஜியா மீது 2008ஆம் ஆண்டு படையெடுத்து அதன் ஒரு பகுதியைத் தன்னுடன் இணைத்தும் கொண்டது. அதே போல் உக்ரேன் முயற்சித்தபோது 2014ஆம் ஆண்டு இரகசியப் படையெடுப்பை மேற்கொண்டு கிறிமியாவைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. அதை ஆட்சேபித்து அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இரசியாவிற்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடைகளை மேற்கொண்டன.

## இரசியாவின் அதிரடி நகர்வு

உக்ரேனில் சனாதிபதி தேர்தல் முடிந்த பின்னர் புதிதாக தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி விளடிமீர் ஜெலென்ஸ்க்கிக்கு இரசியாவிடமிருந்து வாழ்த்துச் செய்தி எதுவும் அனுப்பப்படவில்லை. மாறாக உக்ரேனில் இருக்கும் இரசியர்கள் இரசியக் கடவுச்சீட்டுக்களுக்கு விண்ணப்பிக்கலாம் என்ற அறிவித்தலை இரசியா முதலில் வெளியிட்டது. பின்னர் அந்த விண்ணப்பங்கள் துரித வழியில் பரிசீலிக்கப்படும் என இன்னும் ஒரு அறிவித்தலையும் இரசியா வெளிவிட்டது. இந்த அறிவிப்பு புதிய அதிபருக்கு சவால்விடும் செய்தி என அமெரிக்கா கருதுகின்றது. உடனே உக்ரேனுக்கான அமெரிக்கத் தூதுவர் இரசியாவின் செயல் அபத்தமானதும் திடநிலைச்சீர்குலைப்பும் (destabilisation)ஆகும் என்றது. உக்ரேனின் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள இரு மாகாணங்களில் இரசியர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள். இவர்கள் இரசியக் கடவுச்சீட்டுக்களைப் பெற்று இரசியக் குடிமக்கள் ஆகின்றமை இரசியாவிற்கு அம்மாகாணகள் மீதான பிடியை அதிகரிக்கின்றது. அவர்கள் தற்போது செய்து கொண்டிருக்கும் பிரிவினைப் போர் தீவிரமடையும் போது தனது குடிமக்களைப் பாதுகாப்பது என்ற போர்வையில் அம்மாகாணங்களைப் பிரித்து தனிநாடாக செல்வதற்கு ஆதரவளிக்கலாம் அல்லது அவற்றை பிரித்து இரசியாவுடன் இணைக்கலாம்.

இரசிய சனாதிபதி விளடிமீர் புட்டினின் கடவுச்சீட்டு அறிவிப்பு அபத்தமானதும் உக்ரேனில் திடநிலைச்சீர்குலைப்புமாகும் (destabilisation) என்றார் உக்ரேனுக்கான அமெரிக்கத் தூதுவர். அதைத் தொடர்ந்து அமெரிக்கா அணுவலுவில் இயங்கக் கூடிய இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களை மத்திய தரைக்கடலின் கிழக்குப் பகுதிக்கு அனுப்பியது. அவற்றில் ஒன்றான USS Abraham Lincon

வேல் தர்மா

இல் இருந்து உரையாற்றிய அமெரிக்காவின் இரசியாவிற்கான தூதுவர் அந்த இரண்டு கப்பல்களின் வலிமையும் இரசியாவிற்கு ஒரு அரசுறவியல் செய்தியை (Diplomatic message)இரசியாவிற்கு சொல்கின்றன என எக்காளமிட்டார். உக்ரேனுக்கான அமெரிக்கத் தூதுவர் இரசியா உக்ரேனில் வாழும் இரசியர்களுக்கு கடவுச்சீட்டுக்கள் வழங்குவதை விபரிக்கப் பாவித்த திடநிலைச்சீர்குலைப்பு (destabilisation) என்ற அதே பதத்தை இரசியாவிற்கான அமெரிக்கத் தூதுவரும் பாவித்தார்.அவரின் உரையில் கவனிக்கப்பட வேண்டியவை:

1. ஒவ்வொரு விமானம் தாங்கிக் கப்பலும் ஒரு இலட்சம் தொன் பன்னாட்டு அரசுறவியல் செய்தியை பிரதிநிதித்துவம் செய்கின்றன.

2. இந்த இரண்டு கப்பலின் வலிமையும் இரசியா அமெரிக்காவுடன் உண்மையான உறவை விரும்பினால் இரசியா உலகெங்கும் தனது திடநிலைச்சீர்குலைப்பு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்பதை இரசியாவிற்கு உணர்த்துகின்றன.

## ஒற்றுமையில்லா நேட்டோவும் நெருக்கடியை விரும்பும் புட்டீனும்

இரசியாவை எப்படிக் கையாள வேண்டும் என்பதில் ஜெர்மனியும் அமெரிக்காவும் முரண்படுகின்றன. இதை இரசியா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி உக்ரேனில் தனது பிடியை இறுக்கக் கூடாது என்பதை



உணர்த்தவே USS Abraham Lincolnஇல் நின்று கொண்டு அமெரிக்கத் தூதுவர் ஹண்டர் தனது அமெரிக்காவின் நிலைப்பாட்டை முழங்கியுள்ளார். நேட்டோ உக்ரேனை மையப்படுத்தி இரசியாவுடன் ஒரு போர் புரிவதையோ அல்லது ஒரு நெருக்கடி நிலை உருவாகுவதையோ விரும்பவில்லை. விளடிமீர் புட்டின் தலைமையிலான இரசியாவும் போரை விரும்பவில்லை ஆனால் நெருக்கடியான சூழலைப் பெரிதும் விரும்புகின்றது போல் தெரிகின்றது. அதனால்தான் அது உக்ரேனில் தனது பிடியைத் தளர்த்தாமல் மேலும் இறுக்கிக் கொண்டே போகின்றது. தேர்தலுக்கு முன்னர் இரசியா தொடர்பாக கடுமையான நிலைப்பாட்டில் இல்லாமல் இருந்த புதிய அதிபர் விளடிமீர் ஜெலென்ஸ்க்கி தேர்தலின் பின்னர் இரசிய அரசுறவியல் விளடிமீர் புட்டீனின் கடவுச்சீட்டு அறிவிப்பால் தனது நிலைப்பாட்டைக் கடுமையாக்கியுள்ளார். ஊழல்மிகு சர்வாதிகாரிகளின் ஆட்சியில் அவலப்படும் மக்களுக்கு உக்ரேனியக் கடவுச்சீட்டு வழங்கப்படும் என்றார் ஜெலென்ஸ்க்கி. அவரது தீவிரம் உக்ரேனில் வல்லரசுப் போட்டி தீவிரமடைவதைச் சுட்டிக் காட்டுகின்றது.

# நீர் யானையின் ரகசியங்கள்



விலங்குகளில் உருவத்தில் மூன்றாவது பெரிய விலங்கு நீர் யானை. இவற்றின் எடை 1600 கிலோ வரை இருக்கும். உடலின் நீளம் 1.5 மீற்றர் இருக்கும். உருண்டு, திரண்ட உருளை போன்ற உடல் அமைப்பு கொண்டது. இத்தனை பெரிய உடல் இருந்தாலும் மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் நீர்யானைகள் ஓடக்கூடியவை.

நீர் யானைகளின் பூர்வீகம் ஆபிரிக்க வனப்பகுதியாகும். பாலூட்டி இனமான இவை தாவர உண்ணிகள். இவை கூட்டமாக வாழும் இயல்பு கொண்டவை. ஒரு கூட்டத்தில் ஏறக்குறைய 40 நீர் யானைகள் வரை இருக்கும். ஏறக்குறைய 40 முதல் 50 ஆண்டுகள் வரை இவை உயிர் வாழும். ஆண் நீர் யானைகளை விட பெண் நீர் யானைகள் உருவத்தில் சிறியதாக இருக்கும்.

நீர்யானைகள் நீர் மற்றும் நிலத்தில் வசிக்கக்கூடியவை. இருப்பினும் பெரும்பாலான நேரம் இவை தண்ணீருக்குள்த்தான் தங்கி இருக்கும். தண்ணீருக்குள் மூழ்கி இருந்தாலும் கண்கள், காதுகள் மட்டும் தண்ணீருக்கு வெளியே நீட்டியபடி இருக்கும். இதனால் வெளிப்பரப்பில் நடப்பதை பார்க்கவும், கேட்கவும் அவற்றால் முடியும். தண்ணீருக்குள் மூழ்கி இருக்கும் போது கண்கள் மற்றும் காதுகளை மூடிக்கொள்ளும். இதற்கு ஏற்ப இவற்றின் உடல் அமைப்பு உள்ளது. தண்ணீருக்குள் ஏறக்குறைய 6 நிமிட நேரம் மூழ்கி இருக்கும்.

நீர் யானைகளுக்கு வியர்வை சுரப்பிகள் கிடையாது. இதனால் அவற்றுக்கு வியர்ப்பது இல்லை. பெரும்பாலும் இவை தண்ணீருக்குள் மூழ்கியே இருப்பதால் உடல் வெப்பம் அதிகரிப்பதில்லை. இவற்றின் தோலின் அடிப்பகுதியில் விசேட சுரப்பிகள் உள்ளன. இதனால் அவற்றின் உடலில் எண்ணை பசை போன்ற திரவம் சுரந்துகொண்டே இருக்கும். இதனால் இவற்றின் தோல் பகுதி வறண்டு போகாமல் இருக்கும். நீர் யானைகள் இடையே வசிப்பிடம் தொடர்பாக அடிக்கடி மோதல்கள் ஏற்படுவதுண்டு. ஒரு நீர் யானை கொட்டாவி விடுவது போல தனது பெரிய வாயை திறந்து காண்பித்தால், அது சண்டைக்கு தயார் ஆகி விட்டது என்று அர்த்தம். ஏறக்குறைய 90 சென்ரிமீற்றர் முதல் 120 சென்ரிமீற்றர் நீளம் வரை தனது வாயை திறக்கும். நீர் யானைகளுக்குள் சண்டை நடப்பது வித்தியாசமாக இருக்கும். ஒரு நீர் யானை தனது வாயை அகலமாக திறந்து காட்டினால், தனக்கு எதிரே இருக்கும் நீர் யானையுடன் சண்டைபோட தயார் என்று அர்த்தம். இதையடுத்து எதிரே நிற்கும் நீர் யானை தனது தலையை தாழ்த்தி மண்டியிட்டால் சண்டை வேண்டாம், நான் சமாதானத்திற்கு தயார் என்று அர்த்தம். இரண்டுக்கும் இடையே சண்டை வராது. இதைமீறி இந்த நீர் யானையும் தனது வாயைத் திறந்து காண்பித்தால் அவ்வளவு தான். நானும் சண்டைக்கு தயார் என்பது இதன் பொருளாகும். அடுத்து இரண்டுக்கும் இடையே சண்டை மூண்டு விடும். நீர்யானையின் கடைவாய்ப்பல் பெரிய கொம்பு போல, யானைக்கு தந்தம் இருப்பது போல, நீண்டு இருக்கும். இந்த பல்லால் தனது எதிரியை கடித்து காயப்படுத்தும்.

இரண்டு நீர் யானைகள் மோதும் போது ஒன்றையொன்று கடித்துக்கொண்டு காயப்படுத்தும். முகம், உடல் மற்றும் கால்பகுதியை கடித்துக்குதறும். படுகாயம் அடைந்து கீழே விழும் வரை அல்லது மரணம் அடையும் வரை நீர் யானைகள் ஒன்றுடன் ஒன்று மோதும்.

நீர் யானைகளின் வாயில் உள்ள கொம்பு போன்ற முன் பற்கள், அதன் ஆயுள் முழுவதும் வளர்ந்து கொண்டே இருக்கும். இருப்பினும் உணவு சாப்பிடும்போது மேல் தாடையும், கீழ்த்தாடையும் இணைந்து உணவை அரைத்துக்கொண்டே இருக்கும். இதனால் இந்த பல் எந்த அளவுக்கு வளருகிறதோ அந்த அளவுக்கு தேய்ந்து கொண்டே இருக்கும்.

பகல் நேரங்களில் தண்ணீருக்குள் இருக்கும்போது தண்ணீரில் உள்ள தாவரங்களை நீர் யானைகள் உணவாக சாப்பிடும். இரவு நேரத்தில் அவை கரைக்கு வந்து அங்கு விளையும் பழங்கள், காய்கறிகள், இலை தழைகள், புற்கள் போன்றவற்றை சாப்பிடும். ஒரு நாளைக்கு சராசரியாக 60 கிலோ எடை வரையுள்ள காய்கறிகள், பழங்களை இவை சாப்பிடும். இவற்றின் உதடு பகுதி தடிமனாக இருப்பதால் அதைக்கொண்டு இலை, தழைகளை கடித்து சாப்பிடும். இதன் உதடு பகுதி மட்டும் 50 சென்ரி மீற்றர் நீளம் இருக்கும். நீர் யானையின் குட்டி பிறக்கும் போது ஏறக்குறைய 45 கிலோ எடை இருக்கும். தண்ணீருக்கு அடியில் தான் தாய் நீர் யானை தனது குட்டியை பிரசவிக்கும். பிறந்ததும் குட்டி நீந்தத் தொடங்கும். பிறந்த பிறகு முதல் 4 முதல் 6 வாரம் வரை குட்டிகள் தாய்ப்பால் மட்டுமே குடிக்கும். அதன்பிறகு அவை இலை, தழை மற்றும் புற்களை சாப்பிடத்தொடங்கும்.

நீர் யானைகள் கூட்டமாக வசிக்கும் போது வட்ட வடிவத்தில் அவை இருக்கும். குட்டிகள் நடுவில் இருக்கும், அதைச்சுற்றி தாய் மற்றும் இளம் குட்டிகள் இருக்கும். வெளி வட்டத்தில் ஆண் நீர் யானைகள் இருக்கும். எதிரிகளிடம் இருந்து பெண் நீர் யானை மற்றும் குட்டிகளை காக்கும் பணியை ஆண் நீர் யானைகள் செய்யும். இருப்பினும் குட்டி நீர் யானைகளுக்கு முதலைகள், சிங்கம் மற்றும் கழுதைப்புலி ஆகியவற்றால் ஆபத்து ஏற்படுவதுண்டு. நீர் யானைகளில் குள்ள நீர் யானை வகை ஒன்று உள்ளது. இது உருவத்தில் சிறியதாக இருக்கும். இவற்றை 'பிக்மி நீர் யானைகள்' என்று அழைப்பார்கள். இவற்றின் தலை உருண்டையாக இருக்கும். இவை குறைந்த நேரமே தண்ணீருக்குள் இருக்கும். இவற்றின் தோல் கருப்பு நிறத்தில் காணப்படும்.

# உலகின் அதிவேக பறவைக்கு சிறப்பு மருத்துவமனை




உலகிலேயே அதிக வேகத்தில் பறக்கக்கூடிய பறவை 'பால்கன்' எனப்படும் ராஜாளி பறவை ஆகும். இது மணிக்கு 389 கிலோமீற்றர் வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது. வானில் பறக்கும் போதே 2 கிலோமீற்றருக்குள் இருக்கிற இரையை குறிவைத்து விட்டால் அடுத்த 4 நிமிடங்களில் இரையைப் பிடித்து விடும். பார்வையும் அதீத வேகமும்தான் ராஜாளி பறவையின் பலம்.

இந்த வகை ராஜாளி பறவைகள் அரபுநாடுகளில் அதிகம் காணப்படுகின்றன. குறிப்பாக ஐக்கிய அரபு அமீரகத்தில் பலர் ராஜாளியை செல்லப்பிராணியாக வளர்த்து வருகின்றனர். ராஜாளி பறவைகளுக்கு அந்நாட்டு அரசு பல்வேறு சிறப்பு சலுகைகளை வழங்கி வருகிறது. குறிப்பாக ராஜாளி பறவையை அதன் உரிமையாளர்கள் விமானத்தில் எடுத்து செல்ல ஏதுவாக, அந்த பறவைகளுக்கென தனியாக கடவுச்சீட்டு வழங்கப்படுகிறது.





இந்நிலையில் அபுதாபியில் ராஜாளிகளுக்கு என தனியாக சிறப்பு மருத்துவமனை முதல் முறையாக திறக்கப்பட்டுள்ளது. இங்கு அவற்றின் அலகு, கால் நகங்களை சுத்தம் செய்தல், தேவையான மருந்து வழங்குதல் போன்ற முதலுதவி சிகிச்சை தொடங்கி அறுவை சிகிச்சை வரை அனைத்து வகையான மருத்துவ சேவைகளும் வழங்கப்படுகின்றன.